பக்கங்கள்: 13 விலை : 30/-

காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 07 வெள்ளிக்கிழமை 23.07.2021 கதிர் 260

இனிது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடுவேன் என்ற கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்து திடுதிப்பென விடுக்கப்பட்ட அறிவிப்பல்ல. அண்ணனும் தம்பியும் – மஹிந்தவும் கோட்டாவும் – தங்களுக்குள் உரையாடி, ஆலோசித்த பின்னர், பக்கம்02

இலங்கையில் சீனாவின் செல்வாக்கை தமிழர்கள் துளியளவும் விரும்பவில்லை

கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் திட்டவட்டம்

(ந.லோகதயாளன்)

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 2012 இல் இருந்து இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசுக்குச் சார்பான நிலைப்பாட்டை மிக வெளிப்படையாக சீனா எடுத்திருக்கின்றது. ஆகவே, தமிழ் மக்களைப் பெறுத்தவரையில் ஜனநாயகம் பேணப் பட வேண்டும் என்று குரல் கொடுக்கின்ற வகையிலே சீனாவினுடைய செல் வாக்கு இலங்கையில் அதிகரிப்தை நாங்கள் துளியளவும் விரும்பவில்லை.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

தீர்வு கிடைக்காததால் தொடர்கின்றது அதிபர்கள், ஆசிரியர்களின் போராட்டம்

கொழும்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

ஆசிரியர் சமூகத்தினரின் கோரிக்கைகளுக்குத் தீர்வுகள் கிடைக்காத காரணத்தால் நாடு முழுவதும் அதிபர்கள், ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் 2

‘திருமண கொத்தணி’ இங்கு உருவாகலாம்

இராணுவத் தளபதி எச்சரிக்கை



சுகாதார விதிமுறைகளை பின் பற்றி திருமண வைபவங்களில் 150 பேர் மாத்திரமே கலந்துகொள்ள லாம் என வழங்கப்பட்டுள்ள அனு மதியை ஒரு சிலர் துஷ்பிரயோகம் செய்கின்றனர் எனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. 2

விதிமுறையை மீறி திருமணத்தை நடத்தினால் கடும் சட்ட நடவடிக்கை

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இன்று முதல் அதிரடி நடவடிக்கை

காதார வழிகாட்டுதல்களை மீறி திருமண நிகழ்வுகளை நடத்துபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் முடிவு செய் துள்ளனர். 2

ரிஷாத்தின் வீடு நேற்று சல்லடை

மனைவியிடமும் வாக்குமூலம்

டயகம சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உட்பட மூவரிடம் பொரளை பொலிஸார் நேற்று வாக்குமூலம் 2

1,714 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் நேற்று 1,714 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்த்து 91 ஆயிரத்து 291 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 997 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 64 ஆயிரத்து 755 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் 42 பேர் சாவு; மொத்தக் காவு 3,959

இலங்கையில் மேலும் 42 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 17 பெண்களும், 25 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் 2

யாழில் பிறந்து 17 நாள்களேயான

பச்சிளங்குழந்தைக்கும் கொரோனாத் தொற்று!

யாழ்ப்பாணத்தில் பிறந்து 17 நாள்களேயான பச்சிளங்குழந்தை ஒன்றுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் தனிமைப்படுத்தல் விடுதியில் தனிமைப்படுத்தப் பட்டிருந்த பெண் குழந்தைக்கு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த குழந்தைக்குத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளப்பிட்டிச் சந்தி புடைவைக் கடைக்கு பெற்றோல் குண்டு வீசிய மூவர் கைது!

வாளும் மோட்டார் சைக்கிளும் மீட்பு

(இ.கலையமுதன்)

யாழ்., கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து வாள் ஒன்றும் வன்முறைச் சம்பவத்துக்கு 2

இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சில நெருக்கடிகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக விடுக்கப்பட்ட அறிவிப்பு அது என உள்வீட்டு வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டன.

ஊடகப் பிரதானிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் சந்தித்தார். அந்தச் சந்திப்பின் இடையே அடுத்த தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று அங்கு முதன்முறையாகக் கோடி காட்டினார் கோட்டாபய.

அந்தச் சந்திப்பின் போது பேச்சுகளினிடையே அந்த விடயம் தெரிவிக்கப்பட்டாலும், உண்மையில் அந்த விவகாரத்தைத் தெரியப்படுத்தவே அந்தச் சந்திப்பே அழைக்கப்பட்டது என்கின்றன அந்த உள்வீட்டு வட்டாரங்கள்.

பஸிலின் மீள் வருகையால் மொட்டு கூட்டணிக்குள் பெரும் குழப்பம் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம்தான். விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார போன்றோர் உள்ளுக்குள் குமுறிக் கொண்டு – கறுவிக் கொண்டு – இருக்கின்றனர்.

பஸில் இப்போது அரசுக்குள் வருவது நாட்டின் நிதி நெருக்கடியைச் சமாளிக்கவே தவிர, மொட்டுக் கட்சியின் அடுத்த தலைவராக வர அல்ல என்று விமல், உதய கம்மன்பில்ல, வாசுதேவ போன்ற அதிருப்தித் தரப்புத் தலைவர்களுக்கு மஹிந்த – கோட்டா தரப்பினால் விளக்கமளிக்கப்பட்டதாம். அது உண்மையாக இருந்தால் உதய கம்மன்பில்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்புக்கு முன்னர் அதனை வெளிப்படையாகத் தெரிவியுங்கள் என்று அவர்களால் வலியுறுத்தப்பட்டது. அதை அடுத்தே அண்ணனும் தம்பியும் இந்த முடிவை அறிவிப்பது என்று தீர்மானித்தனர்.

திடுதிப்பென பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று ஜனாதிபதி கோட்டாபய அறிவித்தால் அது பொருத்தமாக இருக்காது என்று மஹிந்த தரப்பில் ஆலோசனை கொடுக்கப்பட்டதாம்.

அதனால், ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பு என்று அறிவித்து, அவர்களுடன் ஜனாதிபதி மனம் விட்டுப் பேசும் போது வெளிப்படுத்தப்பட்ட விடயம் இது என்பது போல – அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவார் என்ற கோட்டாபயவின் அறிவிப்பு – பகிரங்கப்படுத்தப்பட்டதாம்.

இதற்கிடையில் புதிதாகப் பதவியேற்ற நிதி அமைச்சர் அந்நிய செலாவணிக் கையிருப்பை உயர்த்துவதற்காக பல திட்ட முன்மொழிவுகளை வெளியிட்டிருக்கின்றார்.

அதில் ஒன்று – கணக்குக் காட்டப்படாத கறுப்புப் பணத்தையும் வர்த்தகர்கள் அந்நிய செலாவணியாக நாட்டுக்குக் கிடைக்கக் கூடியதாக முதலிடலாம். அரசு கணக்குக் கேட்காது. அந்தப் பணம் வந்த விதம் குறித்து விசாரிக்காது. வருமான வரி விதிக்காது. – இப்படி எல்லாம் சலுகைகளைக் கொடுத்தாவது நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த வழி தேடுகின்றார் புதிய நிதி அமைச்சர்.

ஆனால், கறுப்புப் பணத்தை வெள்ளையாக்க அனுமதிக்கும் இந்த முயற்சிக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. ஒருவரும், ஜே.வி.பியின் எம்.பி. ஒருவரும் நீதிமன்றுக்கு போகின்றார்கள் என்று தகவல்.

எது, எப்படி என்றாலும், ஆளும் தரப்பினரும் எதிரணியினரும் மாறி மாறி சிண்டையைப் பிய்த்துக் கொண்டு சண்டையிடுவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை அடியோடு படுக்க வைத்து விடுவார்கள் என்பது நிச்சயம் போலும்.

– மின்னல் –

இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டக்களப்பு மாநர சபை மேயர் ரி.சரவணபவான் மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு நேற்று ஆஜரான பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டங்களை கடந்த பெப்ரவரி மாதம் நாங்கள் தான் ஆரம்பித்து வைத்தோம். ஆகவே, மக்களுடைய போராட்டங்கள் அனைத்துக்கும் எங்களுடைய ஆதரவு இருக்கின்றது. அரசு நாங்கள் எதிர்பார்த்ததைவிட அவசரமாக மக்களிடம் இருந்த செல்வாக்கை முழுமையாக இழந்து நிற்கின்றது.

நாங்கள் எந்த நாட்டுக்கும் சார்ந்தவர்களும் அல்லர்; எதிரானவர்களும் அல்லர். ஆனால், இலங்கைவாழ் தமிழ் மக்களைப் பெறுத்தளவிலே எங்களுடைய அரசியல் பிரச்சினை சம்பந்தமாக இந்தியத் தமிழ் மக்கள் சார்பிலே சர்வதேச உடன்படிக்கையை 1987ஆம் ஆண்டு கைச்சாத்திட்டது. அது முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

அதன்காரணமாக நாங்கள் இந்தியாவுடன் நெருங்கிச் செயற்படுகின்றோம். இந்திய அரசும் தொடர்சியாக அதிலே உள்ள விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தங்களுடைய கருத்தை மிகவும் ஆணித்தரமாகச் சொல்லி வருகின்றனர்.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் பகையிருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்தியாவினுடைய கரை எல்லைக்கும் இலங்கை கரை எல்லைக்கும் இடையிலான தூரம் 30 கிலோ மீற்றரே. இந்தியாவினுடைய பாதுகாப்பு நிமித்தமாக இந்தியா கரிசனையாக இருப்பது எவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம்.

அதேவேளையில் சீனா இலங்கைக்குள் வந்து காலடி எடுத்து வைக்கும் விடயமாக மற்றைய நாடுகள் விசேடமாக ஜனநாயகத்தைப் பேணுகின்ற – மனித உரிமையை மதிக்கின்ற நாடுகள் இங்கே வந்து இலங்கை அரசோடு நட்புறவு பேணி தங்களுடைய விழுமியங்களைப் பரப்புவது நல்ல விடயம்.

ஆனால், சீனாவைப் பெறுத்தவரையில் அங்கு ஜனநாயகம் இருப்பது எவருக்கும் தெரியாத விடயம். அங்கு ஒரு கட்சி ஆட்சி. மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. மனித உரிமைகள் என்றால் அது என்னவென்று கேட்கின்ற அளவுக்குத்தான் சீனாவினுடைய நிலைப்பாடு.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக 2012 இருந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சீனா அந்தத் தீர்மானங்களுக்கு எதிரான நிலைப்பாட்டை மிக வெளிப்படையாக எடுத்திருக்கின்றது.

ஆகவே, தமிழ் மக்களைப் பெறுத்த வரையில் – பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் – மனித உரிமை மீறல்களுக்கு அதிகமாக முகம் கொடுக்கின்றவர்கள் என்ற வகையில் – ஜனநாயகம் பேணப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கின்ற வகையில் சீனாவினுடைய செல்வாக்கு இலங்கையில் அதிகரிப்தை நாங்கள் துளியளவும் விரும்பவில்லை

ஆகவே, நாங்கள் உயரியதாகக் கருதுகின்ற விழுமியங்களைக் கொண்ட நாடுகள் இலங்கைக்கு அறிவுரை கூறுவது – இலங்கையில் ஈடுபடுவது வரவேற்கத்தக்க விடயம் – என்றார்.

மேலும் 42 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 959 ஆக எகிறியுள்ளது.

குளப்பிட்டிச் சந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில், குளப்பிட்டி சந்திப் பகுதியில் நேற்றிரவு இனந்தெரியாத நபர்களால் புடைவைக் கடை ஒன்றுக்கு பெற்றோல் குண்டுத் தாக்குதல் மூலம் தீ மூட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வாள்கள் மற்றும் பெற்றோல் குண்டு சகிதம் கடைக்குள் புகுந்து இந்த நாசகாரச் செயலைச் செய்துள்ளனர்.

இதன்போது கடையில் இருந்த புடைவைகள் மற்றும் நேற்றுமுன்தினம் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புடைவைகள் உட்பட பல இலட்சம் ரூபா சொத்து தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

தொழில் போட்டி காரணமாக இந்தச் சம்பவம் கைக்கூலிகள் மூலம் செய்யப்பட்டிருக்கலாம் என யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடைக்கும் எதிரில் இன்னொரு புடைவைக்கடை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தீ மூட்டப்பட்ட கடை உரிமையாளர் குறைந்த விலைக்குப் பொருள்களை இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்வது தொடர்பில் எதிர்க்கடை வியாபாரியுடன் மனஸ்தாபம் ஒன்று ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களைக் கைதுசெய்ய மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்ட நிலையில் மூவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

ரிஷாத்தின் வீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெற்றுள்ளனர்.

அத்துடன், ரிஷாத் பதியுதீனின் வீடும் நேற்று பொலிஸாரால் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்த சிறுமி தங்கியிருந்த பகுதி, சம்பவம் இடம்பெற்ற இடம் உட்பட சில இடங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் டயகம சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொரளைப் பொலிஸாரும், மேலும் இரு பொலிஸ் குழுக்களும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

அத்துடன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சும் விசேட விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளது.

தீர்வு கிடைக்காததால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று ஜனாதிபதி செயலாளருடன் நடத்தப்பட்ட பேச்சின் பின்னரே ஜோசப் ஸ்டாலின் மேற்கண்டவாறு கூறினார். சம்பள முரண்பாட்டுப் பிரச்சினை, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு அதிபர்கள், ஆசிரியர்களை அணிதிரட்டி நேற்று கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்து ஜனாதிபதி செயலகம் வரையில் இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

இதன்போது ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதி செயலகத்துக்குள் சென்று ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் பேச்சில் ஈடுபட்டனர்.

இந்தப் பேச்சின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஜோசப் ஸ்டாலின், எங்களின் கோரிக்கைகளுக்கு தீர்வுகள் எதனையும் அதிகாரிகள் வழங்கவில்லை. இந்தப் பேச்சு தோல்வியிலேயே முடிவடைந்தது. இதனால் எங்களின் போராட்டம் தொடரும் – என்று குறிப்பிட்டார்.

விதிமுறையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனிமைப்படுத்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, இன்று முதல் திருமண மண்டபங்களின் அமைப்பாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சுகாதார வழிகாட்டுதல்களை மீறி நடத்தப்பட்ட திருமண நிகழ்வுகள் தொடர்பாக ஆதாரங்களுடன் அநேகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதன் காரணமாக கடந்த இரண்டு நாள்களாக திருமண விழாக்களில் நடத்தப்பட்ட சோதனைகளில் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை மீறுகின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்தால் நாட்டில் புதிய கொரோனா கொத்தணிகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது.

அத்தோடு எதிர்காலத்தில் இதனைக் கட்டுப்படுத்த சுகாதார வழிகாட்டுதல்களை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, மண்டபங்களின் அமைப்பாளர்கள் அதிக பொறுப்புடன் இருக்க வேண்டும். சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க திருமண நிகழ்வுகளை அவர்கள் நடத்த வேண்டும் – என்றார்.

'திருமண கொத்தணி'..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனால் 'திருமண கொத்தணி' ஒன்று உருவாகலாம்.

–இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொழும்பைத் தவிர பிற மாவட்டங்களில் நடைபெறுகின்ற திருமண வைபவங்களில் 150 பேர் மாத்திரமே கலந்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், அதனை விட அதிகளவானவர்கள் திருமண வைபவங்களில் கலந்து கொள்கின்றனர். இதனால் 'திருமண கொத்தணி' ஒன்று உருவாகலாம்.

அவ்வாறு பொறுப்பற்ற வகையில் மக்கள் செயற்படுவார்களாயின் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்.

அத்துடன், தளர்த்தப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை பொதுமக்கள் துஷ்பிரயோகம் செய்தால் திருமணம் மற்றும் ஏனைய நிகழ்வுகளின் மீது கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனிடையே, தளர்த்தப்பட்ட கட்டுப்பாடுகளைப் பொதுமக்கள் துஷ்பிரயோகம் செய்தமையின் காரணமாகவே கடந்த காலங்களில் கொரோனா வைரஸ் பரவியது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் டெல்டா வைரஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை, நாளொன்றுக்கு 1500 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

இதனால் அரசால் சொல்லப்படுகின்ற உரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டியது பொதுமக்களின் கடமை – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பதாயின் மக்கள் மீது சுமத்தப்படும் வரி அதிகரிக்குமாம்

இப்படிக்கூறுகிறார் அமைச்சர் பந்துல

அரச வரி வருமானத்தின் 86 வீதமான தொகை அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கு செலவிடப்படுவதாகவும் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பதாயின் பொதுமக்கள் மீது சுமத்தப்படும் வரி அதிகரித்தல், அரச சொத்துக்களை விற்பனை செய்தல் அல்லது கடன் வாங்குவதற்கு நேரிடுமென வர்த்தக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்துக்கு கிடைத்த வரி வருமானம் 1 லட்சத்து 21 ஆயிரத்து 600 கோடி ரூபாக்களாவதுடன், 1 லட்சத்து 5 ஆயிரத்து 200 கோடி ரூபாக்கள் அரச ஊழியர்களின் சம் பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக செலவிடப் பட்டுள்ளதாகவும், அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு செலுத்திய பின்னர் வரி வருமானத்தில் அரசாங்கத்திற்கு 16 ஆயிரத்து 4 கோடி ரூபாக்கள் மாத்திரமே எஞ்சுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவு, பொருளாதாரம் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு தொடர்பாகப் பொது மக்களைத் தெளிவூட்டும் செய்தியாளர் கலந்துரையாடலில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர் சேவையை இணைந்த சேவையாக மாற்றிச் சம்பளம் தொடர்பான ஆணைக்குழுவை நியமித்து பரந்த உரையாடல் மூலம் ஆசிரியர்கள் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட கலாநிதி பந்துல குணவர்தன உலகில் செல்வந்த, வறுமைப்பட்ட மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட அனைத்து நாடுகளும் சமகால தொற்று நோய் நிலைமையால் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளன எனவும், இலங்கை போன்ற சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளுக்கு இது பொதுவான விடயமென்பதையும் சுட்டிக்காட்டினார்.

உலகளாவிய ரீதியில் பரவியுள்ள தொற்று நிலைமையால் 40 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளமையுடன், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மூடப்பட்டிருக்கும் இந்நிலைமையில் முழு உலகிலும் விநியோகச் செயன்முறை தடைப்பட்டு உற்பத்தி, நுகர்வு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமையை அமைச்சர் குறிப்பிட்டுக் கூறினார்.

இத்தொற்று நிலைமையால் உலகம் முழுவதிலும் பசி, போசாக்கின்மை அதிகரித்து வறுமை அதிகரித்துள்ள இவ்வேளையில், இலங்கைக்கு மாத்திரமல்ல அனைத்து நாட்டுக்கும் நிதி முகாமைத்துவம் கடினமான சவால் மிக்கதாக அமைந்துள்ளதென அமைச்சர் கூறினார்.

அரச நிதி தொடர்பான பிரச்சினை, அந்நிய செலாவணிப் பிரச்சினை, பொருளாதார வீழ்ச்சி போன்ற முக்கிய பிரச்சினைகள் மூன்றுக்கும் இலங்கை மாத்திரமல்ல உலகிலுள்ள அனைத்து நாடுகளும் முகங்கொடுக்கின்றமையை அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

ரிஷாத் வீட்டு சிறுமியின் மரணம் சி.ஐ.டியிலும் முறைப்பாடு பதிவு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த மலையகச் சிறுமியின் உயிரிழப்பு தொடர்பாக குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திலும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தேசிய சங்கங்களின் ஒன்றியம், குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இந்த முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளது.

சிறுமியின் மரணம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி, இந்த முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்குக் கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டயகம 3 ஆம் பிரிவில் இருந்து 15 வயதுச் சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

கடந்த 03ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 15 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த சிறுமி நீண்டகாலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை குறித்து தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

சேதனப் பசளை உற்பத்திக்கு இராணுவத்தால் புதிய இயந்திரம்

சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படும் இலை குழைகளை சிறு சிறு துண்டுகளாக்கும் 'அக்ரி ஷ்ரெடர் பிபி 1' எனும் புதிய இயந்திரம் அண்மையில் இராணுவத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய இயந்திரம் இராணுவத்தின் 4 ஆவது மின் மற்றும் இயந்திர பொறியியலாளர் படையணி மற்றும் 5 ஆவது பொறியியலாளர் சேவை படையணியின் கூட்டுமுயற்சியால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அக்ரி ஷ்ரெடர் பிபி 1 இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு 3.5 மெற்றிக் தொன் புதர்களை 10 மில்லி மீற்றர் துகள்களாக வெட்டக் கூடிய ஆளுமை கொண்டது என இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகை இயந்திரத்தின் சந்தை விலை 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆகும். ஆனால் மின் மற்றும் இயந்திர பொறியியலாளர் படையணி மற்றும் பொறியியலாளர் சேவை படையணியின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த இயந்திர தயாரிப்புக்கு சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவாகியது.

இதை யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் தலைமை அதிகாரி லெப்டினன்ட் கேர்னல் பி.டி.எல்.ஏ.சி. சிறிசேனா வடிவமைத்துள்ளார் என இராணுவம் தெரிவித்துள்ளது.

ரிஷாத் வீட்டுப் பணிப்பெண் அறையில் 5 ஆயிரம் ரூபா கண்டெடுக்கப்பட்டது

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாக பணியாற்றிய சிறுமி உயிரிழக்க காரணமான பௌத்தாலோக மாவத்தையில் உள்ள வீட்டில் 19 வயதான வேலைக்கார இளைஞன் குறித்த சிறுமியைத் தாக்கினார் என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சிறுமியின் அறையில் 5 ஆயிரம் ரூபா தாள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் வாக்குவாதம் ஏற்பட்ட பின் இத்தாக்குதல் நடந்ததாகத் தெரிய வந்துள்ளது. குறித்த வேலைக்காரனால் தாக்கப்பட்டதால் பயந்து சிறுமி தனது தாயாரை அழைத்து தான் துன்புறுகின்றேன் என தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை அடுத்த மாதம் முதல் அழைக்க முடிவு

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களையும் அடுத்த மாதம் முதல் பணிக்கு அழைக்க எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் முதல் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் கொண்ட பாடசாலைகளை முதலில் ஆரம்பித்து அதனை சிறிது சிறிதாக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான திட்டங்களை வகுப்பதற்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை அழைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு கொவிட் தடுப்பூசி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளமையால் அவர்களை பாடசாலைகளுக்கு அழைப்பதில் ஆபத்து குறைவாக உள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் பெண்ணை அடிமையாக வைத்திருந்த மெல்பன் தம்பதியருக்குச் சிறைத் தண்டனை

சுமார் பத்து வாரங்களாக விக்டோரிய உச்ச நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் கந்தசாமி கண்ணன் மற்றும் குமிதினி கண்ணன் தம்பதியர் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கான தண்டனை அறிவிக்கப்பட்டது.

உச்ச நீதிமன்ற நீதிபதி ஜோன் கம்ப்ளன் இவர்களுக்கான தீர்ப்பை அறிவித்தார்.

இதன்படி குமிதினி கண்ணனுக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் கந்தசாமி கண்ணனுக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குமிதினி (வயது 53) ஆகக்குறைந்தது 4 ஆண்டுகளை சிறையில் கழித்த பின்னர் பரோலில் வெளியே வருவதற்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும்கண்ணன் (வயது 57) ஆகக்குறைந்தது 3 ஆண்டுகளை சிறையில் கழிக்க வேண்டுமெனவும் இந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணை இத்தம்பதியர் உரியமுறையில் கவனிக்காமல் விட்டுவிட்டனர் எனவும், இவர்களது நடவடிக்கை மனிதாபிமானமற்ற முறையில் அமைந்திருந்ததாகவும் நீதிபதி தெரிவித்தார்.

எனினும் இத்தீர்ப்பிற்கெதிராக இவர்கள் இருவரும் மேன்முறையீடு செய்யவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

யாழில் தன்னைத்தானே சுட்டு இராணுவ சிப்பாய் தற்கொலை!

யாழ்ப்பாணம் - நாவற்குழி தெற்கு கெமுனு வோச் படைப்பிரிவு படைமுகாமில் கடமையிலிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துள்ளார்.

மேற்படி இராணுவச் சிப்பாயின் சடலம் நேற்று (வியாழக்கிழமை) காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சிப்பாய் இராணுவத்தில் இணைந்து 10 மாதங்களே ஆகியுள்ள நிலையில், வீட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாகவே தற்கொலை செய்துகொண்டார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவ பொலிஸார் மற்றும் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மரண விசாரணையின் பின்னர் உயிரிழந்த இராணுவ சிப்பாயின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியரிடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

வெட்கமில்லாப் பேரினவாதம்

பௌத்த, சிங்களப் பேரினவாதமோ, அந்தப் பேரினவாதக் கொடுங்கோல் ஆட்சியின் ஏவல் கட்டமைப்பாக இயங்கும் பொலிஸ் துறையோ திருந்தப் போவதில்லை என்பது தெளிவு.

கறுப்பு ஜூலை நினைவு கூரலுக்கு எதிராக நீதிமன்றங்கள் மூலம் தடை உத்தரவு பெறும் பொலிஸாரின் 'அதிமேதாவித் தனம்' இதனைத்தான் நிரூபித்து நிற்கின்றது.

அப்பாவித் தமிழர்கள் மீது பௌத்த, சிங்களப் பேரினவாதம் தனது மிலேச்சனமான, கொடூரமான இனவெறியை – காட்டு மிராண்டித்தனத்தை – மனித நாகரிகத்துக்கே இழுக்கான குரூரத்தை – கட்டவிழ்த்து விட்ட மோசமான நிகழ்வே ஆடிக் கலவரம்.

அந்த மோசத்தில் உயிரிழந்த அப்பாவிகளை – தமது உறவுகளை – அந்த மக்கள் நினைவு கூர்வதைத் தடுப்பது –அதுவும் சட்டத்தின் பெயரால் தடுப்பது – அந்தக் குரூர வெறியாட்டத்திலும் விட கேவலமான – மோசமான – செயல்.

பொலிஸ் துறையைக் கையாளும் அமைச்சரின் பௌத்த, சிங்கள வெறிப் போக்கைத் தோலுரித்துக் காட்டும் – அம்மணப் படுத்தி நிற்கும் – கேவலச் செயல்தான் நினைவு கூரலுக்கான இந்தத் தடை உத்தரவு.

கொவிட் தொற்றுத் தொடர்பான மட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை தனது அரசியல் இலாபங்களுக்காகக் கோட்டாபய அரசு பயன்படுத்துகின்றது என்ற குற்றச்சாட்டு – உண்மை நிலைமை பற்றிய விளக்கம் – அண்மைக் காலத்தில் வெளியாகி வந்தது தெரிந்ததே.

அரசியல் நோக்கங்களுக்காக மட்டுமல்ல, தனது பேரினவாத வெறிப் போக்கை நிலைநிறுத்தவும், அந்த மட்டுப்படுத்தல்களை அதிகாரத் தரப்பு தவறாகப் பயன்படுத்துகின்றது என்பதற்கு இந்தத் தடை உத்தரவு நல்லதோர் உதாரணம்.

தனது இனவெறித்தனத்தின் விளைவை மூடி மறைக்க பௌத்த. சிங்களப் பேரினவாதம் சட்டத்தையும் நீதியையும் கூட தவறாக வழி நடத்தப் பின் நிற்காது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

கொந்தளிப்பும் குரூர நிகழ்வுகளும் நிறைந்து விட்ட தமிழர்களின் இனப் போராட்ட வரலாற்றில் வன்முறைப்புயல் மோசமாக வீசிய காலத்தின் ஆரம்பம் 1983 ஆடிக் கலவரம்தான்.

பிரளயம் போன்ற இனக்கலவரம் வெடித்து பல்லாயிரம் தமிழர்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்ட இந்த நிகழ்வை வரலாற்று ஆய்வாளர்கள் 'கறுப்பு ஜூலை' என்று குறிப்பிடுகின்றார்கள்.

ஜூலை 23ஆம் திகதி – சரியாக 38 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய திகதியில் – யாழ்ப்பாணம், பலாலி வீதியில், திருநெல்வேலிக்கு அருகே இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர்.

அதற்குப் பழிவாங்குவதற்காக நாடு முழுவதிலும் பல்லாயிரம் தமிழர்களைப் பலி வாங்கியது பேரினவாத வெறித்தனம்.

திடீரென எழுந்த பழிவாங்கும் உணர்ச்சியாக இந்தக் கலவரம் கட்டவிழவில்லை. மாறாக, இனப்படுகொலை – இனவழிப்பு – என விவரிக்கும் அளவுக்கு, அரசின் பின்புலத்தில் திட்டமிட்டு வகுக்கப்பட்ட – தருணம் பார்த்து நடத்தப்பட்ட – கொடூரத் தாக்குதலாக இந்த வெறியாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த இனவழிப்பு நடவடிக்கையில் நாடு முழுவதும் மூவாயிரம் தமிழர்கள் காட்டு மிராண்டித் தனமாகப் படுகொலை செய்யப்பட்டனர். பெரும்பாலான தமிழர்கள் சிங்களக் காடையர் கும்பல்களினால் கண்டம் துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். அல்லது அடித்தே படுகொலை செய்யப்பட்டனர். பல குடும்பங்கள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான பல்லாயிரக் கணக்கான வீடுகள், கடைகள், கட்டங்கள், கைத்தொழில் வளாகங்கள், சினிமாத் தியேட்டர்கள், எரிபொருள் நிலையங்கள், வர்த்தக மையங்கள் இரவோடு இரவாக எரித்துத் தரை மட்டமாக்கப்பட்டன. தலைநகர் கொழும்பில் மட்டும் ஒன்றரை லட்சம் தமிழர்கள் இரவோடு இரவாக வீடு வாசல்கள், சொத்துக்களை இழந்து ஏதிலிகளாயினர். கப்பல்களில் அவர்கள் அகதிகளாக வடக்கு, கிழக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நன்கு திட்டமிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களை புத்தரின் பெயரால் மதத்தை அனுஷ்டிக்கின்றவர்கள் என்று கூறும் பேரினவாதிகளே முன்னெடுத்தனர்.

அவ்வளவு கொடூரத்தையும் புரிந்து விட்டு, அந்தக் கொடூரத்தில் கொல்லப்பட்டோரை நினைவு கூர்வதற்கும் தடை விதிப்பது, பேரினவாதிகள் வணங்கும் புத்தனுக்கும் கூட அடுக்காது.

பஞ்ச சீலத்தை வலியுறுத்தியவரின் பெயரால் இந்தக் கொடூரத்தைத் தொடர்வது சிங்கள இனத்துக்கே வெட்கம். பெரு வெட்கம்.

நீதிமன்ற தடையுத்தரவை மீறும் மட்டுமாநகர ஆணையருக்கு அவரது சட்டத்தரணி சரியாக ஆலோசனை வழங்கவேண்டும்

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சாடல்

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவை மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் மீறக் கூடாது எனவும் நீதிமன்றத்தை அவமதிக்கும் நிலையை ஏற்படுத்தக்கூடாது எனவும் ஆணையாளரின் சட்டத்தரணி ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கவேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர மேயரால், ஆணையாளருக்கு எதிராக இடைக்கால தடை எழுத்தாணை கோரி மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இது தொடர்பான வழக்கு மேல் நீதிமன்றில் நீதிபதி எம்.என்.அப்துல்லா தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாநகர சட்டத்தின்படி மேயருக்கு இருக்கின்ற அதிகாரங்களை, விரும்பினால் ஆணையாளருக்கு பாரப்படுத்தலாம். அப்படியாக இந்தப் புதிய ஆணையாளர் வந்தபோது 10 அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

ஆனால், அதற்குப் பின்னர், கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி இன்னொரு சபைத் தீர்மானத்தின் மூலமாக கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டன.

அந்த அதிகாரங்களை சட்டப்படி மீளப்பெற்றிருந்தாலும் கூட தான் அதற்கு ஒழுகி நடக்க மடாட்டேன் எனவும், அந்த அதிகாரங்களைத் தானே பயன்படுத்துவேன் எனவும் ஆணையாளர் விடாப்பிடியாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பதன் காரணமாக அவரை அப்படியான செயற்பாட்டில் இருந்து தவிர்ப்பதற்கும் அந்த அதிகாரங்களை அவர் உபயோகிப்பதை சட்டப்படியாக நிறுத்துவதற்கும் இவ்வாறு இடைக்கால தடை எழுத்தாணை கோரி விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

தலையீடு செய்யக் கூடாது என்றே நீதிமன்றம் இடைக்காலத் தடையத்தரவு கடந்த வழக்கில் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி ஆணையாளர் தொடர்ச்சியாக முதல்வரால் வழங்கப்பட்ட அதிகாரத்தில் தலையீடு செய்வதாக நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாக மாநகர முதல்வரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் முன்நின்று தப்பித்து விடக்கூடாது

கிளிநொச்சி, ஜூலை 23

குற்றவாளிகள் சட்டத்தின் முன் தப்பிக்கொள்வதற்கு சட்டங்கள் அனுமதிக்காத வகையில் சட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என கிளிநொச்சி பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் இணைப்பாளர் வாசுகி வல்லிபுரம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டிருந்த சிறுவர் பெண்கள் பாதுகாப்பு தொடர்பான கவனவீர்ப்பு பேரணியின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் -

தற்பொழுது நாட்டில் நிலவிவரும் தேசியப் பேரிடர் காரணமாக நாட்டு மக்கள் மரண ஓலங்களையும், மரண அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கியிருக்கின்ற இந்த சூழ்நிலையில், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிரான பாலியல் ரீதியிலான கொடுமைகள், கொலைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பன கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இதனால் பல சிறுமிகள் சீரழிக்கப்படுகின்றமையை நாங்கள் அறிகின்றோம். இதற்கு எதிராக நாங்கள் கண்டனம் தெரிவிக்கின்றோம். துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்படுகின்ற சிறுவர்கள், பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான சூழ்நிலை காணப்படுமிடத்து எதிர்வரும் காலங்களில் சிறுவர்களும், பெண்களும் பாதுகாக்கப்படுவார்கள். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் மரணம் குறித்து விசாரிக்க குழு நியமனம்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிவந்த சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தலைமையில் இந்தக் குழுவை சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் நியமித்துள்ளார்.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் நேற்று (வியாழக்கிழமை) மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது, இதுவரை இடம்பெற்ற விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பாக சட்டமா அதிபருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனையடுத்தே, சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டயகம 3 ஆம் பிரிவில் இருந்து 15 வயது சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

கடந்த 03 ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 15 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த சிறுமி நீண்டகாலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தொடர்பாகத் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாவிலிருந்து 997 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 997 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று (வியாழக்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 64 ஆயிரத்து 755 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 89 ஆயிரத்து 577 ஆக பதிவாகியுள்ளது.

இதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 917 ஆக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 22

'ஓவிய மாமணி' வீ.கே. எனப்படும் வீ.கனகலிங்கத்தின் பொன்விழா 1990இல் கொழும்பில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். வீரகேசரி ஆசிரியர் சிவநேசச்செல்வன் பேசிக் கொண்டிருக்கின்றார். பின்னால் மேடையில் தினபதி, சிந்தாமணி ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம், தொழிலதிபர் எஸ்.பி.சாமி (பின்னாளில் 'தினக்குரல்' நாளிதழை ஸ்தாபித்தவர்), தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் ஆகியோர்.
'தினபதி', 'சிந்தாமணி', 'வீரகேசரி', 'உதயன்', 'சஞ்சீவி' போன்ற பத்திரிகைகளுக்கு Master Headline வரைந்தவர் இந்த ஓவியர் வீ.கேதான். அவர் 1985இல் வரைந்த எழுத்து வடிவத்தில்தான் 'உதயன்', 'சஞ்சீவி' பெயர்த் தலைப்பு இன்னும் வெளிவருவது குறிப்பிடத்தக்க அம்சம்.

இன்றைய கட்டுரை அங்கத்துக்குள் இறங்குமுன்னர் வாசகர்களிடம் ஒரு தவறுக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

நேற்றைய எனது இந்தத் தொடரின் எஞ்சிய பகுதி 11ஆம் பக்கத்தில் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், பக்க வடிவமைப்புத் தவறில் அது 11ஆம் பக்கத்தில் பிரசுரமாகாமல் போயிற்று. அதை இன்று முதலில் தருகிறேன். அதன் விவரம் வருமாறு :-

ஒரு கணத்தில் துணிச்சலுடன் நான் எடுத்த முடிவு அல்லது நான் செய்த நரித்தந்திர வேலை அந்தத் தீர்ப்பை நேரத்துடன் என் கைக்கு கிடைக்க வைத்து.

அடுத்த நாள் நாடாளுமன்றத்தைக் கலக்கப்போகின்ற ஓர் ஆவணம் என் கைகளில் சிக்கி இருக்கின்றது என்பதைச் சரிவரப் புரிந்து கொள்ளாமலேயே அதனை எடுத்துக் கொண்டு துணை ஆசிரியர் கே.கே. இரத்தினசிங்கத்தின் அறைக்குள் போனேன். தொடர்ந்து விவரத்தைக் கூறி ஆவணத்தை ஒப்படைத்தேன்.

அதைப் பரிசீலித்த துணை ஆசிரியர் இரத்தினசிங்கம் வீரப்பா மாதிரி ஒரு சிரிப்புச் சிரித்தார். எந்நேரமும் கடுகடு என்று சீறிவிழும் அவர் என்னை ஒரு பார்வை பார்த்தார். இந்த "சுள்ளான் சைஸில்' இருந்துகொண்டு இப்படியொரு வேலை பார்த்தாயா? - என்று கேட்பதுபோல இருந்தது கறுப்புக் கண்ணாடி ஊடான அவர் பார்வை.

'ஐஸே வாரும்!' என்று என்னை அழைத்துக்கொண்டு ஆசிரியர் சிவநாயகத்தின் அறைக்குக் கூட்டிச்சென்றார். விடயத்தை விவரித்தார்.

இளைஞராக
எஸ்.டி.சிவநாயகம் ஐயா

"வித்தியாதாரன் கொண்டு வந்துள்ள இந்தச் செய்தி நல்ல செய்தி. அதன் நம்பகத்தன்மையிலும் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் நாம் அதை பிரசுரிக்கலாமா, அதில் சட்டச்சிக்கல் இல்லையா?" - என்ற தொனியில் ஆசிரியரிடம் கேள்வி எழுப்பினார் இரத்தினசிங்கம்.

நான் கொணர்ந்த ஆவணத்தை துருவினார் ஆசிரியர் எஸ்.டி.எஸ். ஐயா. அவருக்கும் விடயத்தில் நம்பிக்கை பிறந்தது. ஆவணம் எப்படிக் கிடைத்தது என்பதை விசாரித்தார்.

"ஒரு ரிப்போட்டர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். என்ன பிரச்சினை வந்தாலும் எதிர்கொள்வோம். பிரசுரியுங்கள்!" என்றார் ஐயா.

பிறகென்ன? பெரியவரின் அனுமதி கிடைத்தமையால் நீட்டி முழங்கினார் துணை ஆசிரியர் இரத்தினசிங்கம். அந்தத் தலைப்புச் செய்தியில் நிருபர் என என் பெயரைப் போடவும் அவர் தவறவில்லை.

அடுத்தநாள் அந்தச் செய்தி பெரும் சங்கடங்களை நெருக்கடிகளை ஏற்படுத்தத் தவறவில்லை. அவற்றை சிவநாயகம் ஐயா எப்படிக் கையாண்டார்? சரி, அந்த ஆவணம் யாது? அது எனக்கு எப்படிக் கிடைத்தது? அதற்குள் பொதித்து கிடந்த சூக்குமம் என்ன?

நீதிமன்றத் தீர்ப்பை அதுவும் உயர் நீதிமன்றத் தீர்ப்பை அது பகிரங்க ஆவணமாக முன்னர் வெளியிடும் துணிச்சல், இப்படியான யுத்த நெருக்கடிகளைத் தாண்டி, நாற்பத்தியிரண்டு ஆண்டுகள் பத்திரிகைத்துறை அனுபவத்தைப் பூர்த்தி செய்து நிற்கும் எனக்கு இன்று கூட இல்லை. ஆனால் அதனை சிவநாயகம் ஐயா - இரத்தினசிங்கம் இணை அன்று துணிச்சலுடன் செய்தது.

அவை பற்றிய விவரங்களை நாளை பார்ப்போம்.

- இது நேற்றைய பத்திரிகையின் தொடர்ச்சிப் பக்கத்தில் விடுபட்டுப் போன விடயம் இனி இன்றைய விவகாரத்துக்கு வருவோம்.

****

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக முதல் தடவை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் தமது முதலாவது பதவிக்காலத்தில் முதல் நான்கு வருடங்கள் முடிந்த பின்னர் எஞ்சிய இரண்டு வருட பதவிக்காலத்தில் தமக்கு விரும்பிய எந்த நேரத்திலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு அறிவிக்கலாம் என்ற ஏற்பாடு அரசமைப்பின் மூன்றாவது திருத்தமாக கொண்டுவரப்பட்டது

அதன் அரசமைப்பு செல்லுபடி மற்றும் சட்ட வலிமை குறித்து நீதியரசர் சுப்பையா சர்வானந்தா தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் விசாரணை செய்து தனது முடிவை சபாநாயகருக்கும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவுக்கும் எழுத்தில் அனுப்பியிருந்தது.

இது நடந்தது 1982 ஓகஸ்ட் பிற்பகுதியில் ஆகும்

அந்தக் காலத்தில் இப்போது இருப்பது போல கணினி வசதிகள் இல்லை. நீதிமன்றத்தில் ஆவணங்கள், தீர்ப்புக்கள் உட்பட எல்லாம் பெரும்பாலும் தட்டச்சில்தான். போட்டோப்பிரதி எடுக்கும் முறை அறிமுகமான காலம் என்றாலும், நீதிமன்றங்களில் பெரும்பாலும் தீர்ப்புக்கள் தட்டச்சே செய்யப்பட்டன. தீர்ப்பின் பிரதிகள் பல எடுக்கப்பட வேண்டி இருப்பதால் ஒரே சமயத்தில் ஆறு, ஏழு பிரதிகளை நல்ல தெளிவாக எடுப்பதற்கு வசதியாக, அச்சமயங்களில் புதிய காபன் தாள்களை பயன்படுத்துவார்கள். பாவித்த காபன் தாள்களை மீண்டும் பாவிப்பது - குறிப்பாக முக்கிய தீர்ப்பு போன்றவற்றை தட்டச்சு செய்யும் போது - பயன்படுத்துவது பெரும்பாலும் தவிர்க்கப்படும்.

அவ்வேளையில் நீதியரசர் சர்வானந்தாவின் சேம்பரில் அவரது அலுவலக உதவியாளராக என்னிலும் விட சுமார் 20 அல்லது 25 வயது மூத்த ஒரு நண்பர் இருந்தார். அவரது பெயரை தவிர்த்துக் கொள்கிறேன். இப்போது அவர் உயிருடன் இருக்கின்றாரா, எங்கு இருக்கின்றார் என்பவை எதுவும் எனக்குத் தெரியாது.

அவர் தமிழர். தமது கடமையே கண்ணாக இருப்பார். நேர்மையாளர். கடவுள் பக்தர். குறுக்கு வழியில் எதுவும் செய்ய மாட்டார். தமது நேரடி மேலதிகாரியான நீதியரசர் சர்வானந்தாவைக் கடவுளாக மதிப்பார். அப்படித்தான் அவருடன் பழகுவார்.

நீதிமன்ற வராண்டாக்களில் சந்தித்துப் பேசுவோம். எங்கள் ஊடாட்டம் கன்ரீனிலும் தொடரும். நீதியரசர் சர்வானந்தாவின் சேம்பர் வரை வராந்தாவில் பேசிக் கொண்டு செல்வோம். நீதியரசர் சர்வானந்தாவின் வழக்குகள், தீர்ப்புக்கள் பற்றிய விடயங்கள், தகவல்கள், திகதிகளை அறிந்து கொள்வதற்காக அவருடனான தொடர்பாடலை வைத்திருந்தேன். எனினும் உள்வீட்டுத் தகவல்களை கொஞ்சமும் கசிய விடமாட்டார். எத்தனையாம் திகதி தீர்ப்பு என்ற தகவலைத் தருவார். ஆனால் தீர்ப்பின் விவரம் குறித்து மூச்சுக் கூட விடமாட்டார். அந்தத் தீர்ப்பை அவரே தட்டச்சு செய்து இருப்பார். ஆனால் அதன் விவரம் குறித்து ஓர் அசுமாத்தமும் காட்டமாட்டார். சம்பந்தப்பட்ட வழக்கு தொடர்பான ஆயத்தின் நீதியரசர்கள் பிரசன்னமாக இருந்தால் இத்தனையாம் திகதி இந்த வழக்கின் தீர்ப்பு வரும் என்று சொல்லுவார். இத்தனையாம் திகதி, இந்த வழக்கு நீதியரசர் சர்வானந்தா இடம் பெறும் ஆயத்தின் முன்னால் விசாரணைக்கு வருகிறது, 'கவர்' பண்ணுங்கள் என்று தகவல் தருவார். அதற்கு அப்பால் ஒரு அங்குலம் கூட விடயங்களைக் கசிய விடமாட்டார். அவ்வளவு தூரம் தனது பொறுப்பு, கடமை மீதும், தமது மேலதிகாரியான நீதியரசர் மீதும் பற்றும் பாசமும் உண்மை விசுவாசமும் கொண்டிருந்தார்.

சேம்பரில் நீதியரசர் இல்லாத சமயங்களில் அங்கு சென்றும் என் நண்பரைச் சந்திப்பது உண்டு. சேம்பரின் பிரதான கதவைத் திறந்து உள்ளே சென்றால் முன்புறத்தில் சிறிய வராண்டா ஒரு பகுதி. அதையொட்டி நீதியரசரின் பரந்த அறை - அட்டாச் பாத்ரூம் வசதிளுடன்.

அந்த வராண்டாவில்தான் என் நண்பரின் தட்டச்சு இயந்திரமும் மேசையும் உள்ளன. ஒரு சிறிய அலுமாரி போன்ற போன்றவை அந்த மேசைக்குப் பக்கத்தில். அந்த மேசை வரைதான் எங்களுக்கு அனுமதி. அதுவும் சேம்பரில் நீதியரசர் இல்லாத சமயத்தில்தான்.

நீதியரசர் சர்வானந்தா நீதிமன்ற அமர்வுக்குச் செல்லாமல் சேம்பரில் தமது அறையில் இருந்தால் அவரையே சுற்றி நின்று ஊழியம் புரிவது எனது நண்பரின் பணி.

அன்று பிற்பகல் நீதிமன்ற கன்ரீனில் அவரைக் கண்டேன்.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பான தீர்ப்பு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அனுப்பப்பட்டு விட்டது என்றார். தீர்ப்பின் விவரம் குறித்து ஒரு தட்டுத் தட்டிப் பார்த்தேன்.

"ஆ..! அதெல்லாம் கூறுவது சரியல்ல" - என்று ஒரே வெட்டு வெட்டினார்.

தீர்ப்புக் கையெழுத்திடப்பட்டு சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்ட பின்னர்தான் நீதியரசர் சர்வானந்தா வீட்டுக்குப் புறப்பட்டார் என்றார் அவர்.

"நானும் வீட்டுக்குப் போகப்போறேன். சேம்பரைப் பூட்டி விட்டு வருகிறேன். ஒன்றாக புறப்படலாம்." - என்றார். தலையசைத்து பேசியவாறு நீதியரசரின் சேம்பர் வரை ஒன்றாகவே பேசியவாறு நடை போட்டோம். அங்கு வராண்டா மேசையில் தனது தட்டச்சு இயந்திரத்துக்கு முன்னால் என்னை கதிரையில் இருத்தி விட்டு சேம்பர் அறைக்குள் அவர் போனார். பாத்ரூமை மூடி, சேம்பர் அறை மின் விசிறியை நிறுத்தி, அது போன்ற சில தொட்டாட்டு வேலைகளைச் செய்வதற்காக.

என் கைகள் சும்மா இருக்கவில்லை. பரபரத்தன. மேசையில் தட்டச்சு இயந்திரத்துக்குப் பக்கத்தில் இருந்த பைலைத் திறந்து பார்த்தேன். புத்தம்புது காபன் தாள்கள். ஒரே ஒரு தடவை மட்டும் தட்டச்சுக்குப் பயன்படுத்திய நிலையில் ஒரு செட் - சுமார் 6 அல்லது 7 தாள்கள் இருந்தன. ஒரே மாதிரியான தட்டச்சு படிந்த அடையாளங்கள் இருந்தமையால் என் செய்தி தேடும் மூக்கு வியர்த்தது. ஒரு கணத்துக்குள் விடயங்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்து ஊகித்தேன். அந்தக் காபன் தாளில் ஒன்றை சத்தம் சந்தடி இன்றி உருவினேன். மெள்ள மடித்து, கையிலிருந்த என் டயரிக்குள் அமுக்கினேன். அதை நான் என் டயரிக்குள் முடக்கவும், அறைக்குள் தனது பணி முடித்த எனது நண்பர் வெளியே வராண்டாவுக்கு வரவும் சரியாக இருந்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | விஞ்ஞானம் | அலகு 19

தொடைகள்

தொடைகளின் அறிமுகம்

* நிச்சயமான வரையறை ஒன்றின் மூலம் வேறுபடுத்தி இனங்காணத்தக்க தொகுதியானது தொடை எனப்படும்.
* தொடை ஒன்றின் அனைத்து மூலகங்களையும் இரட்டை அடைப்புகளினுள்ளே எழுதிக்காட்ட முடியும்.
* ஒவ்வொரு மூலகமும் ஒரு தடவை மாத்திரமே எழுதப்படும்.

தொடை ஒன்றின் மூலகத்தைக் காட்டும் குறியீடு

உதாரணம் : A = {1 , 3, 5, 7 } எனில் $\in$, $\notin$

3 ஆனது தொடை A இன் ஒரு மூலகமாகும் என்பது $2 \in A$

6 ஆனது தொடை A இன் ஒரு மூலகமன்று என்பது $6 \notin A$

01. பயிற்சி

பின்வருவனவற்றில் பொருத்தமான குறியீட்டை கீறிட்ட இடத்தில் இட்டு நிரப்புக.

01. B = {2, 4, 6, 8,10 } எனில்
- i) 5 ..... B
- ii)2 ..... B
- iii) 7 ..... B
- iv) 4 ..... B
- v) 9 ..... B
- vi) 8 ..... B

02. 13 ..... {முதன்மை எண்கள்}

03. 8 ..... {சதுர எண்கள்}

04. U..... {ஆங்கில உயிரெழுத்துக்கள்}

05. கரட் ..... {பழங்கள்}

சூனியத்தொடை

* நிச்சயமாக வரையறுக்கப்பட்ட தொடை ஒன்றிற்கு மூலகங்கள் எதுவும் அமையாது விடின் அது சூனியத்தொடை எனப்படும்.

உதாரணம் :- M = {4 இலும் குறைந்த 5 இன் மடங்குகள்} எனில்
M = {} அல்லது
M = $\emptyset$

02. பயிற்சி

(1) D = {2 பக்கங்கள் மட்டும் கொண்ட பல்கோணிகள்}
(2) F = வானவில்லின் நிறங்கள்
(3) G = {0}
(4) X = {1 இற்கும் 3 இற்குமிடையே உள்ள ஒற்றை எண்கள்}
(5) Y = {சதுர எண்ணாக அமையும் முதன்மை எண்கள்}

தொடை ஒன்றின் மூலகங்களின் எண்ணிக்கை

உதாரணம் : T = {1 , 4 , 9 , 16} எனில்
* தொடை T இன் மூலகங்களின் எண்ணிக்கை 4 ஆகும்.
* இதனைக் குறியீட்டு வடிவில் பின்வருமாறு எழுதலாம்

n (T) = 4
* சூனியத்தொடை ஒன்றின் மூலகங்களின் எண்ணிக்கை பூச்சியமாகும்.

03. பயிற்சி

பின்வரும் தொடைகள் ஒவ்வொன்றினதும் மூலகங்களை எழுதுவதன் மூலம் மூலகங்களின் எண்ணிக்கைகளை குறியீட்டில் எழுதுக

1) A = {15 இலும் குறைந்த முதன்மை எண்கள்}
.....
.....

2) X = {'விகடகவி' எனும் சொல்லிலுள்ள எழுத்துக்கள்}
.....
.....

3) Z = {இலங்கையின் மாகாணங்கள்}
.....
.....

4) P = {3 இலும் குறைந்த 3 இன் மடங்குகள்}
.....
.....

5) S = {0}
.....
.....

6) B = $\emptyset$
.....
.....

7) Y = {36 இன் காரணிகள்}
.....
.....

8) M = {36 இன் முதன்மைக் காரணிகள்}
.....
.....

ஆக்கம் - தாமினா சுபாகரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

உள்ளூர் மசாலாப் பொருள்கள் பொதி 800 ரூபா சலுகை விலைக்கு விற்பனை

தரமுயர்ந்த உள்ளூர் மசாலாப் பொருள்கள் அடங்கிய 1,350 ரூபா சந்தைப் பெறுமதி கொண்ட மசாலாப் பொருள்கள் பொதி ஒன்று 800 ரூபா சலுகை விலையில் விற்பனை செய்வதாக கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்ட பயிர் செய்கை அபிவிருத்தி மற்றும் அது சார்ந்த கைத் தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்தார்.

இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | கணிதம் | அலகு - 16

விகிதம் - விடைகள்

i) 6 : 8, 9 : 12, 15 : 20
ii) 2 : 4, 3 : 6, 4 : 8
iii) 4 : 10, 6 : 15, 8 : 20
iv) 16 : 2 : 10, 24 : 3 : 15, 32 : 4 : 20
v) 10 : 6 : 14, 15 : 9 : 21 20 : 12 : 28
vi) 32 : 8 : 16 16 : 4 : 8, 24 : 6 : 12
vii) 4 : 8 : 16 : 12 2 : 4 : 8 : 6 3 : 6 : 12 : 9

i) 2 : 1
ii) 4 : 5
iii) 7 : 3
iv) 3 : 4
v) 3 : 5
vi) 2 : 5
vii) 3 : 5 : 6
viii) 5 : 3 : 6
ix) 5 : 2 : 8
x) 2 : 7 : 9

01. i) காந்தன் : அமலன் = 450 : 750 = 3 : 5
ii) காந்தன் = $\frac{3}{8}$ அமலன் = $\frac{5}{8}$

02. i) முருகன் : கமலன் = 50 : 80 = 5 : 8
ii) முருகன் = $\frac{5}{13}$

03. i) 60000 : 72000 = 5 : 6
ii) 5 + 6 = 11
iii) 55000/=
iv) சுதன் (இலாபம்) = $\frac{5}{11}$ x 55000
= 25000/=
அருண் (இலாபம்) = $\frac{6}{11}$ x 55000
= 30000/=

04. 12 x 40000 : 8 x 30000 = 2 : 1
மதன் (இலாபம்) = $\frac{2}{3}$ x 60000
= 40000/=
ரதன் (இலாபம்) = $\frac{1}{3}$ x 60000
= 20000/=

05.

பெயர்	முதலீடு	காலம்	முதலீடு x காலம்	இலாப பங்கு
கண்ணன்	30000	12	30000 x 12	$\frac{3}{5}$ பங்கு
ராமன்	40000	6	40000 x 6	$\frac{2}{5}$ பங்கு

ஆக்கம் - தாமினா சுபாகரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

கொவிட் 4 ஆவது விளிம்பில் இலங்கை இன்னும் இல்லை

என்கிறது சுகாதார அமைச்சு

இலங்கை கொரோனா வைரஸின் நான்காவது அலையை எதிர்கொள்ளும் விளிம்பில் உள்ளதெனக் கூறுவதற்கு இப்போது எந்த அடையாளமும் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் நான்காவது அலையின் முதல் கட்டத்தை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கிறது என்றும் பயணக் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க சரிவு ஏதும் இல்லை என இலங்கை மருத்துவ சங்கம் கூறியிருந்தது.

இந்தக் கருத்துக்களுக்கு பதிலளித்த சுகாதார மேம்பாட்டு பணியக இயக்குநர் வைத்தியர் ரஞ்சித் படுவந்துதாவா, தற்போது நாடு மூன்றாவது அலைகளின் இறுதி கட்டத்தில் உள்ளது எனத் தெரிவித்தார்.

தற்போதைய சூழ்நிலையைப் பார்த்து அதை விளக்கும் வெவ்வேறு கண்ணோட்டங்கள் இருக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறிருப்பினும் தொற்றுநோயியல் பிரிவில் உள்ள தரவு மற்றும் புள்ளி விவரங்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

நினைவுகளில் வாழும் எழுத்தாளர் அருண் விஜயராணி நலிவுற்ற பெண்களின் குரலாக ஒலித்த ஆளுமை அவர்

- தாமரைச்செல்வி -

(ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் அண்மையில் நடத்திய இணையவழிக் காணொலி அரங்கில் நிகழ்த்தப்பட்ட உரையின் வடிவம் இது)

ஒருவர் வாழும் காலங்களில் எப்படி நடந்து கொண்டார்? அவர்களின் செயற்பாடுகள் எப்படி இருந்திருக்கின்றன? - என்பதை வைத்தே அவர்கள் மறைந்த பின் நினைவு கூரப்படுவார்கள். அவர்களின் நினைவு என்பது அவர்கள் வாழ்ந்த காலத்தின் சாதனைப் பதிவாகவே கொள்கிறோம்.

அருண் விஜயராணியைப் பொறுத்த வரையில் அவர் பல்துறை சார்ந்த ஆளுமை மிக்கவர். இனிய மனமும் இரக்க குணமும் சமூகத்தை நேசிக்கும் இனிய பண்பும் நிறைந்தவர். அவரைப் பற்றியும் அவர் ஆஸ்திரேலியாவில் செய்த இலக்கிய, சமூகச் செயற்பாடுகளைப் பற்றியும் இங்குள்ளவர்கள் அனைவரும் அறிந்தே இருப்பார்கள். இலக்கிய உலகிலும் சமூகச் சேவைகளிலும் அவர் பதித்துச் சென்ற தடம் தனித்துவமானது.

அவர் 1990 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆஸ்திரேலியத் தமிழர் ஒன்றியத்தின் கலாசாரச் செயலாளராக அங்கம் வகித்தமையுடன் 'ஆஸ்திரேலிய முரசின்' ஆசிரியராகவும் பணி புரிந்திருக்கிறார். இவருடைய படைப்புகள் மெல்பேர்ண், சிட்னி, பிரிஸ்பேர்ண் தமிழ் வானொலிகளிலும் ஒலிபரப்பாகியிருக்கின்றன.

2000 ஆம் ஆண்டு மல்லிகை இதழ் ஆஸ்திரேலியா சிறப்பிதழ் வெளியிட்ட போது, அதில் இவரின் பங்களிப்பு இருந்திருக்கிறது. அதில் எழுதிய 'தொத்து வியாதிகள்' என்ற சிறுகதையைத் தமிழகத்தின் கவிஞர் தமிழச்சி சுமதி தங்கபாண்டியன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமை மட்டுமன்றி, தான் விரிவுரையாளராக பணியாற்றியசென்னைராணிமேரிகல்லூரியில் நடந்த ஒரு கருத்தரங்கில் இக்கதை பற்றிய விமர்சனத்தையும் பகிர்ந்திருக்கிறார்.

இவருடைய 'கன்னிகாதானங்கள்' என்ற சிறுகதைத்தொகுதி தமிழகத்தின் பிரபல ஓவியர் மணியம் செல்வன் வரைந்த அட்டைப்பட ஓவியத்துடன் 1991 இல் மெல்பேர்ணில் வெளியீடு செய்யப்பட்டது. குறிப்பிட்ட 'கன்னிகாதானங்கள்' தொகுப்பில் உள்ள கதைகளை கனடாவில் இருக்கும் சியாமளா நவரத்தினம் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

அருண். விஜயராணி, இந்த சமூகத்துக்காக எழுதுவதோடு மட்டும் நின்று விடாமல், பல சமூகப் பணிகளையும் ஆற்றியிருக்கிறார். ஆஸ்திரேலியத் தமிழ்

இலக்கிய கலைச் சங்கம், இலங்கை மாணவர் கல்வி நிதியம் முதலான அமைப்புகளில் இணைந்து தன் பங்களிப்பை வழங்கியிருந்தார். அத்துடன் சிறிது காலம் இந்த அமைப்புகளில் தலைவராகவும் ஆக்கபூர்வமாக செயற்பட்டவர். அவர் தலைவராக இருந்த காலத்தில் கல்வி நிதியம் வெள்ளிவிழாவை கொண்டாடியது. மிகத் திறமையாக நிர்வாகம் செய்யக்கூடிய ஆற்றலும் அவரிடம் இருந்தது. ஆஸ்திரேலியாவில் வருடா வருடம் எழுத்தாளர் விழாக்களையும் முன்னின்று நடத்தியிருக்கிறார்.

இத்தனை ஆளுமை மிக்க பெண்ணின் தோழி என்ற வகையில் ஆரம்பத்திலிருந்து நாம் பழகிய நாள்களைப் பற்றி பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

1973 ஆம் ஆண்டு நான் வானொலிக்கு ஆக்கங்கள் எழுதத் தொடங்கிய காலம். வானொலிக்கு சிறுகதை , இசையும் கதையும் என்று எழுதிய நேரம். அப்போது அருண் விஜயராணியும் நிறைய ஆக்கங்கள் வானொலிக்கு எழுதிக் கொண்டிருந்தார்.

வானொலிக்கு எழுதுவதற்கு முன்பே அவர் மாணவியாக இருந்த பொழுது 'இந்து மாணவன்' என்ற பாடசாலை மலரில் 'அவன் வரும் வரை' என்ற சிறுகதையை 1972 இல் எழுதியிருந்தார்.

அப்போதெல்லாம் வானொலியில் நல்ல தரமான நிகழ்ச்சிகள் இலக்கியத்துக்கு களம் தந்து ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தன. வானொலிக்கு எழுதிய காலத்தில்

அருண்.விஜயராணி

முதலில் பேனா நண்பர்களாகத்தான் நாம் அறிமுகமானோம். பக்கம் பக்கமாக கடிதங்கள் எழுதி எம் நட்பை வளர்த்துக் கொண்ட காலங்கள் அவை. எமது கதைகளை ஒருவருக்கொருவர் விமர்சிப்பது, மற்றவர்களுடைய கதைகளைப்பற்றி கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது, நாம் வாசிக்கும் புத்தகங்களைப்பற்றி விமர்சனம் செய்வது என்று கடிதங்களிலேயே இலக்கியம் பேசிக்கொள்வோம்.

வானொலியில் பல நிகழ்ச்சிகளுக்கு எழுதினாலும் நான் சிறுகதை எழுதுவதோடு மட்டுமே நின்று கொண்டேன். ஆனால் விஜயராணி சிறுகதை, நாடகம், உரைச்சித்திரம் என்று பல்துறையிலும் தன் ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தார். அவர் எழுதியவற்றில் மறக்க முடியாத பாத்திரம் 'விசாலாட்சி பாட்டி'. சமூகத்தில் நடக்கும் சின்னச்சின்னப் பிரச்சினைகளையும் நகைச்சுவை ததும்ப விசாலாட்சி பாட்டியின் குரலாக எடுத்துச் சொல்வார்.

சிலவசனங்களை இப்போதும் நினைத்துக்கொள்கிறேன். அவரின் வசனங்களை இயல்போடு நடித்து பாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருப்பார்கள். வானொலி நேயர்களிடையே பெரும் வரவேற்பை பெற்ற பாத்திரம் விசாலாட்சிப் பாட்டி. இது மட்டுமல்ல அவர் வானொலிக்காக நிறைய நாடகங்களையும் எழுதியிருக்கிறார் . இவரின் நாடகங்களை கே.எம்.வாசகர், பி.விக்னேஸ்வரன் ஆகியோர் நெறியாள்கை செய்து ஒலி பரப்பியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் வானொலி நாடகங்களை காத்திருந்து கேட்போம். மிகச் சிறப்பான நாடகங்கள் ஒலிபரப்பாகும்.

அவருடைய இன்னொரு ஆளுமை அவருடைய நேர்காணல்கள். சமூகத்தின் பல்துறை சார்ந்தவர்கள் பலபேருடன் அவர் எடுத்த நேர்காணல்கள் அவருக்கு பெரும் பெயரைப் பெற்றுத்தந்திருக்கிறது. அவர் கேட்கும் கேள்விகள் சம்பந்தப்பட்டவர்களின் ஆளுமைகளை வெளிக்கொண்டு வர உதவும் விதமாய் அமையும். அதே நேரம் இலக்கியம், அரசியல், சினிமா என்று அவருக்குள் இருக்கும் திறமையும் வெளிப்படும்.

வானொலிக்கு எழுதிக்கொண்டே தொடர்ச்சியாக பத்திரிகைகளுக்கும் எழுதத் தொடங்கினோம். அதன் பின்தான் முதல் தடவையாக நேரில் சந்தித்தோம்.

அப்துல் ஹமீத்துடன் அருண் விஜயராணி

எங்கள் ஊரான பரந்தன் புகையிரத நிலைய அதிபராக அப்போது திரு. நடராஜா அவர்கள் பணியாற்றிக்கொண்டிருந்தார். என் தந்தையுடன் மிகவும் நட்புடன் பழகியவர். அவரின் மகள் மஞ்சுவிடம் மாலை நேரங்களில் என் தங்கைகள் படிக்கப் போவார்கள். மஞ்சுவின் அம்மாவின் அக்கா மகள்தான் விஜயராணி.

ஒருதடவை அவர்கள் வீட்டுக்கு விஜயராணி வந்தபோது மஞ்சு அவரைக்கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்தார். இரட்டைப்பின்னலும் பாவாடை சட்டையும் குழந்தை முகமுமாக அன்று அவரைப் பார்த்தது இன்றும் என் கண்களில் நிற்கிறது.

அதன் பின்னர் கொழும்பில் தெஹிவளையில் இருக்கும் விஜயாவின் வீட்டுக்கும் போயிருக்கிறோம். அவரின் தந்தை மிகச்சிறந்த ஓவியர். அவர் வீட்டில் அவர் வரைந்த ஓவியங்களை பிரமிப்புடன் பார்த்து ரசித்திருக்கிறேன். கோவில் கோபுரங்கள், இயற்கைக் காட்சிகள், பறவைகள் என்று அழகழகான ஓவியங்கள்.

அவர்கள் வீடு போனால் அப்பா, அம்மா, சகோதரர்கள் என்று அத்தனை பேரும் அன்போடு உபசரிப்பார்கள். அந்த மாலை நேரங்கள் மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும்.

நேரிலும் கடிதங்களிலும் நிறையப் பேசுவோம். அப்போதுதான் ஒரு குறுநாவலை நால்வர் சேர்ந்து எழுதுவோமா என்று விஜயாதான் முதலில் ஆரம்பித்தார். விஜயா, நான், மண்டூர் அசோகா, தேவமனோகரி விஜேந்திரா நால்வரும் சேர்ந்து எழுதிய 'நாளையசூரியன்' எனும் நாலு வாரத்தொடர் வீரகேசரியில் 1979 இல் வெளிவந்தது.

அந்தக் கதை எழுத முதலில் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஒரு இளைஞன் கொழும்பு சூழலில் தடம் புரண்டு ஹிப்பியாக அலையும் கதை. இதை எழுதுவது சரியாய் வருமா என்று தயங்கிய போது தைரியம் தந்து எழுத வைத்தது அவர்தான். கதைக்கு நிறையப் பாராட்டுக்கள் கிடைத்த அதே சமயம் எதிர் விமர்சனமும் எழவே செய்தது. இப்படி ஒரு கதையை பெண்கள் எழுதியிருக்கிறார்களே என்ற கருத்து முன் வைக்கப்பட்ட போது அதை தைரியமாக எதிர்கொண்டவர் விஜயாதான். பெண் எழுத்து, ஆண் எழுத்து என்று எதுவும் இல்லை. பெண்களைப்பற்றி ஆண்களும் ஆண்களைப் பற்றி பெண்களும் எழுதலாம். நாங்கள் என்ன கருத்தை எழுதுகிறோம், அது எப்படி சமூகத்தை சென்றடைகிறது என்பதுதான் முக்கியம் என்று தன் கருத்தை முன் வைத்தார். அதைப் பற்றி மற்றவர்கள் என்ன விமர்சனங்கள் செய்தாலும் கவலைப்பட மாட்டார்.

அவரிடமிருந்து நான் கற்றுக்கொண்டவை எத்தனையோ. எனது கதைகள் வரும்போதெல்லாம் நல்லதென்றால் மனமாரப் பாராட்டுவார். திருத்தம் ஏதும் இருந்தால் அதை உரிமையோடு சுட்டிக் காட்டுவார். அவரின் நேர்மையில் எனக்கு நம்பிக்கை இருந்தது. எனது கதைகளை

மட்டுமன்றி பிறருடைய கதைகளைப் பற்றியும் தன் விமர்சனங்களை பகிர்ந்து கொள்வார். எதையும் ஊன்றிப் பார்க்கும் இந்த ஆளுமைதான் காலப்போக்கில் நிறைய ஆய்வு செய்யவும் விமர்சனம் செய்யவும் அவருக்கு உறுதுணையாக இருந்திருக்கிறது.

அவரிடம் நான் கண்ட மிகச்சிறந்த இயல்பு அனைவரையும் நேசிப்பது. அவரைப்பிடிக்காதவர்கள் என்று யாருமே இருக்க மாட்டார்கள். எல்லோராலும் நேசிக்கப்படுகின்ற பெண்ணாகத்தான் அவர் வாழ்ந்திருக்கிறார். அவரின் எழுத்தும் பேச்சும் வாழ்வில் நலிந்து போன பெண்களின் குரலாகத்தான் எப்போதுமே இருந்திருக்கிறது. அதுவும் கையாலாகாத்தனத்துடன் ஏழ்மை நிலையில்

வாழும் பெண்கள் பற்றிய கவலையும் அவருக்கு நிறையவே உண்டு. இவர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடு அது. அதை தன் படைப்புகளில் கொண்டு வந்ததோடு மட்டுமல்ல அதற்கான தீர்வுகளையும் தன் எழுத்தில் பதிவு செய்தவர். ஒரு சமூக நேசிப்பாளராக ஒரு இலக்கியவாதியாக தன் கடமையை நியாயத்துடன் செய்தவர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 74

இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

ரணில் காலத்துப் பேச்சின்போது

230. ஒக்டோபர் 2006இல் நடந்த ஜெனிவா பேச்சுக்களில் நோர்வேயூடாக சமாதான முயற்சிகளில் ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளும் ஈடுபட்டனரா?

ஒரு தீர்வை நோக்கிப் போகும் முயற்சிகள் இரண்டு பக்கத்திலுமே இருக்கவில்லை. இடையில் அகப்பட்ட மக்களை முன் வைத்து இருபக்கமுமே செயல்பட வில்லை. அரசாங்கத்தின் பக்கத்தில், பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதின் பின் தான் தீர்வு என்பது அவிழ்க்கப் பட்டது. விடுதலைப் புலிகள் பக்கத்தில், இடைக்கால அரசை ஏற்று, யுத்த நிறுத்தத்தை முழுமையாக ஸ்ரீலங்கா கடைப்பிடித்து, ஏ9 பாதையை திறந்து, சுதந் திரமான நடமாட்டத்துக்கு வழிவகுத்தால் மேற்கொண்டு தீர்வு நோக்கிப் போகலாம் என்ற நிலைப்பாட்டைத் தெரிவித்தார்கள்.

ஆனால் ஏற்பாடுகளை செய்த நோர்வேயினதும் ஜெனீவா அதிகாரிகளின் சிந்தனைகளில் மீண்டும் போர் மூழலாம் என்ற அங்கலாய்ப்பும் நடந்து கொண் டிருக்கும் யுத்த நிறுத்த மீறல்களால் அவதிப்படும் மக் களையும் அவர்களின் அவலங்களையும் நீக்க வழிகள் தேவை என்பதே முன்னின்றது.

அந்தச் சந்திப்புக்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த சுவிர்ஸலாந்தின் வெளிவிவகார அமைச்சின் பிரதி தலைமை தூதுவர் ஹெய்டி ரெக்லி யாவினி தனது பேச்சில் "ஜெனிவாவில்தான், இயற் றப்பட்ட ஜெனிவா சட்டமூலங்கள் எல்லாம் பாரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன, அப்படியான பாரிய பொறுப்புகளை சுமந்துள்ள அந்த நகரம் கருத்து வேற்றுமைகளால் மோதல்களில் ஈடுபட்டோருக்கு அவர்களுக்கு, சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் அந்த மோதல்களில் இடையே அகப்பட்டுள்ள மக்கள் அவைகளால் பாதிக் கப்படையாது இருக்கும்படி பார்க்கும் கடப்பாடுகள் உண்டு" என்று அறிவுறுத்தினார். கடமைகள், தீர்வி லும் பார்க்க இடைப்பட்டுள்ள மக்களின் அவலங்க ளையே இந்த நாடுகள் முதன்மைப்படுத்தின.

ஆனால் அதைவிடுத்து, இரண்டு பகுதிகளிலிருந் தும், முக்கியமானதாகவோ அல்லது கடைசியான தெனக் கணித்தோ, பெருமளவு பிரதிநிதிகளும் ஆதர வாளர்களும் அங்கு சென்றிருந்தனர்.

ஆனால் பேச்சுக்கு முன்னரும் சுற்றாடலிலும் பல இராஜதந்திர நகர்த்தல்கள் நடந்து கொண்டேய்யிருந் தன.

மஹிந்த ராஜபக்ஷவும் எதுவிதத்திலும் குறையா மல் விடுதலைப் புலிகளோடு சேர்ந்து நோர்வே சமா தான ஏற்பாடுகளை முறிப்பதில் குறியாயிருந்தார்.

ஜெனிவா - 02இன் போது

உதயன் ஆசிரியர் வித்தியாதரனோடு இருந்த பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில், அதைத் தொடர்ந்தும் முன்னெடுத்து, அங்கிருந்தபடி, வித்தி யாதரன் மூலம் நேரடியாக விடுதலைப் புலிகளோடு பேசி, தனிப்பட்ட ஊடாட்டத்தைத் தொடருமாறு தனது பிரதிநிதிகளைக் கோரினார். அதற்குப் பக்கபலமாகப் பஸில் ராஜபக்ஷவும் அங்கு ஜெனிவாவில் நிற்பாரென அறிவித்தார்.

இதற்கு இடையில் பொட்டம்மானின் உளவுத் துறையின் தகவல்களால் சில சிக்கல்கள் எழுந்தன. பாலசிங்கமே ஜி.எல்.பீரிஸ் உடன் தனிப்பட்ட பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவற்றை கருணாவிடமும் தெரிவித்து, இந்த வழியில்தான் மேலே போகலாம் எனக் கண்டிமைப்படுத்தினார் என அந்தத் தகவல்கள் தெரிவித்தன. இருவரும் பின்னர் தமிழ்ச்செல்வனையும் (ஒஸ்லோ உடன்பாட்டில்) கையெழுத்துப் போட கேட் டார்கள் என்ற அறிக்கைகளால் பாலசிங்கத்துக்கு நெருக்கடிகள் இருந்தன.

புலம்பெயர் புத்திஜீவிகளின் கழுகுக் கண்களும் அவர் தொடர்பில் நோட்டத்தில் இருந்தனர். இதனால் அவரும் வித்தியாதரனை அணுகி, மஹிந்தவிடம் சில சலுகைகளை பெறுமாறு கேட்டார்.

231. அந்தச் சலுகைகள் என்ன?

பாலசிங்கம்தான், இடைக்கால சபை (ISGA) என் பதை ஜெனிவா - 1 பேச்சின்போது முன்னெடுக்க ஏற்றுக் கொண்டாலும், ஜீ.எல்.பீரிஸ் அரசு பிரதிநிதி யாக வந்தால், உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு காணத் தம்முடன் முன்னர்இணங்கியவரை வைத்துக் கொண்டு ISGA அடிப்படையிலான பேச்சில் முன்னேற முடியாது என பாலசிங்கம் நினைத்தார். பழைய அந்த விடயத்தில் நின்றால் அதற்குத் தானேதான் காரணம் என்ற சந்தேகங்கள் வலுக்கலாம். ஆகவே ஜீ.எல்.பீரிஸை அனுப்பாமல், வேறொருவரை தலைமைதாங்கி அனுப்புமாறு மஹிந்தவிடம் கேட்கும்படி வித்தியாதர னிடம் கோரினார். அதே சமயம் தமிழ்ச்செல்வனும் தமிழ் பேசக்கூடிய உறுப்பினர் ஒருவர் அரசுத் தரப்பில் வந்தால் தாங்கள் தமிழிலும் தங்களது உணர்வுகளை சொல்லலாம் என்றும் அபிப்பிராயப்பட்டார். வித்தி யாதரன் மூலமான இக்கோரிக்கைகளை மஹிந்த ஏற்று, ஜி.எல்.பீரிஸை தவிர்த்து, நிமால் சிறிபால டி சில்வாவை தலைமை தாங்க அனுப்பினார். அவரோடு தமிழ் பேசத் தெரிந்த ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, றோஹித போகொல்லாகம, பேரியல் அஷ்ரப், பாலித கோஹென்ன என்பவர்களை அனுப்பினார். அத்தோடு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பைத் துண்டிப்பதற்கு வாதாடி வெற்றிபெற்ற சட்டத்தரணிகள் ஹெச். எல். டி. சில்வா,கோமிந் தயாசிறி, மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ரால், முன்னாள் பொலிஸ் மா அதி பர் சந்திரசிறி பெர்ணான்டோ ஆகியோரையும் அனுப் பினார். சந்திரசிறி பெர்ணான்டோ அப்பொழுது அரசின் சமாதான காரியாலயத்திற்கு காரியதரிசியாகவிருந்தார்.

வித்தியாதரனூடாக, விடுதலைப் புலிகளை நேர டிச் சந்திப்புக்களுக்குச் சம்மதிக்க வைக்க தெண்டித்த மஹிந்த, மறுபுறத்தில் பயங்கரவாதம் முதலில் தீர்க்கப் பட்ட பின்னர்தான் அரசியல் தீர்வு என்ற - முன்கூட்டியே எடுக்கப்பட்ட - தீர்மானங்களை மேசையில் வைத்து, அதுதான் கடைசி சந்தர்ப்பம் என்பதையும் பக்கத்து மேசைகளின் ஊடாக உருட்டி விட்டார்.

இவை எல்லாம் முதலாவது ஜெனீவாப் பேச்சில் இடம்பெற்றன.

232. விடுதலைப்புலிகளின் பார்வைகள் எப்படி இருந்தன?

ஜெனிவா - 2 இன் போது ஏ9 பாதை மூடப்பட்டிருந்த தாலும் மக்கள் முடக்கப்பட்டதாலும் அவர்களது கைக ளில் ஒரு பாரிய மக்கள் அவலம் இருந்தது. அவர்கள் அந்தச் சுமையை முதல் நீக்கினால் மற்றவற்றை - நேரடிப் பேச்சுக்களைக் கூடப் பார்க்கலாம் என எண் ணினார்கள்.

ஆனால் ராஜபக்ஷக்களை நம்பி நோர்வே பேச்சு களை முறிக்கும் எண்ணத்தில் அவர்கள் இல்லை. அவர்களோடும் பல சர்வதேசப் பிரதிநிதிகள், முக்கிய மாக இடைக்கால சபையை வடிவமைத்த புத்திஜீவிகள் பலர், விடுதலைப் புலிகளின் ஆதரவுக்காக ஜெனிவா விற்கு வந்திருந்தனர்.

பாலசிங்கம் உட்பட எல்லோரும் நிலைமைகளை பேசிக் கொண்டார்களாயினும் பாலசிங்கம் தனது உடல் நிலை காரணமாக, ஜெனிவா 2 இல் இருக்க வில்லை. ஆதலால் விடுதலைப் புலிகளை தமிழ்ச்செல் வன் தலைமை தாங்க அவருடன் பொலிஸ் பொறுப் பாளர் நடேசன், இராணுவப்பேச்சாளர் இராசையா இளந்திரையன், சமாதான நிலையத்தின் காரியதரிசி புலித்தேவன், பெண்களின் அரசியல் பிரிவின் தமிழ் விழி, அவர்களின் சட்டத்தரணிகள் வி.உருத்திர குமார் (தற்சமய நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர்), போல் டொமினிக் ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தி னர். சுற்று வட்டாரத்தில் பல சர்வதேசங்களிலிருந்தும் வந்த அவர்களது அமைப்பாளர்களும் மற்றைய புத்தி ஜீவிகளும் இருந்தார்கள். அவர்களது நிலைப்பாடும் விடுதலைப் புலிகள் அறிவித்ததுபோல எதிர்த்து நிற்க வேண்டும் என்பதாக இருந்தது. தாங்கள் சர்வதேசங்க ளில் போராட்டங்கள் நடத்துவோம், ஆதரவுகள் தரு வோம், பெறுவோம், மக்களுக்கு உதவுவோம் என்ற உறுதிமொழிகளையும் தந்தார்கள்.

நாடு திரும்பிய விடுதலைப் புலிகள் சர்வதேச புலம் பெயர் அமைப்புகளின் திடத்தையும், உதவிகளையும்,

ஜெனிவா - 01இன் போது

அவர்களது சூளுரைகளையும் பகிர்ந்தனர். இவைகள் எல்லாவற்றாலும் தலைவரின் அந்த வருட மாவீரர் தின உரை காரசாரமாகவும் பேச்சு வார்த்தைகளை உடைப்பதாகவும் இருந்தது.

(வளரும்....)

கொரோனா வைரஸ் தொற்றினை கண்டறியும் பரிசோதனைக் கருவிகளை வழங்கியது அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய அமெரிக்கா கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இலங்கையின் போராட்டத்துக்கு கொரோனாத் தொற்றை கண்டறியும் 5 லட்சம் பரிசோதனைக் கருவிகளை வழங்கியுள்ளது.

இலங்கை மதிப்பில் 30 கோடி ரூபா பெறுமதியான இந்தப் பரிசோதனை கருவிகள் அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்தி கிளையான அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பினூடாக இலங்கை சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 6 ஆம் திகதி இலங்கைக்கு நன்கொடையாக வழங்கிய 15 லட்சத்திற்கும் அதிகமான மொடர்னா தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக கொரோனாத் தொற்றைக் கண்டறியும் பரிசோதனைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வைரஸ் தொற்றை மிக விரைவாக கண்டறிவதை சாத்தியமாக்குவதன் மூலம், அமெரிக்க மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட இப்பரிசோதனைகள் இலங்கையில் உயிர்களை காப்பதுடன் பொதுச் சுகாதாரத்தையும் பாதுகாக்க உதவும் என இலங்கை மற்றும் மாலைதீவுக்கான யு.எஸ்.எய்ட் செயற்பணி இயக்குநர் ரீட் ஈ.ஷ்லிமேன் தெரிவித்தார்.

இந்த நன்கொடை இலங்கை அரசாங்கத்தின் பெருந்தொற்றுக்கான பதிலளிப்பிற்கு அமெரிக்கா வழங்கிய முந்தைய உதவிகளின் அடிப்படையில் அமைவதுடன் எமது உறுதியான, நீண்டகால பங்காண்மையையும் பிரதிபலிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிறப்பொருளெதிரியாக்கியை கண்டறியும் இந்தப் பரிசோதனைக் கருவி கொரோனா வைரஸின் இருப்பை நேரடியாகக் கண்டறியும். இப்பரிசோதனை மேற்கொள்வதற்கு எளிதானவையாக இருப்பதுடன் நேரடிப் பரிசோதனைகளுக்கான விரைவான பரவலாக்கப்பட்ட அணுகலை சாத்தியமாக்குகின்றன.

மேலதிக உபகரணங்களோ அல்லது விசேட ஆய்வு கூடங்களுக்கான தேவையோ இப்பரிசோதனைகளுக்கு இல்லாதிருத்தலானது அதிகளவான பரிசோதனைகளை மேற்கொள்ள உதவுகிறது.

80 லட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக பெறுமதியான அவசர விநியோகங்கள் மற்றும் முக்கியமான சேவைகளையும் மேலதிகமாக அதே மாதிரியான நன்கொடையாக 200 செயற்கை சுவாசக் கருவிகள் மற்றும் 15 லட்சத்துக்கும் அதிகமான மொடர்னா தடுப்பூசிகளையும் நன்கொடையாக வழங்கி பொதுச் சுகாதாரத்ததைப் பாதுகாப்பதற்காக இப்பெருந்தொற்றின் ஆரம்பத்திலிருந்தே அமெரிக்கா இலங்கையுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றியுள்ளது.

கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் இலங்கை மக்களின் அவசர சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், இப்பெருந்தொற்றின் எதிர்மறையான பொருளாதாரத் தாக்கங்களைத் தணிப்பதற்காகவும் மற்றும் முடிவாக உயிர்களைக் காப்பதற்காகவும் இந்த உதவிகளானவை இலங்கையின் 25 மாவட்டங்கள் மற்றும் ஒன்பது மாகாணங்களிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களைச் சென்றடைந்துள்ளது.

யு.எஸ்.எய்ட் இன் கொவிட் -19 உதவி பல தசாப்தகாலமாக மேற்கொள்ளப்படும் பொதுச் சுகாதார முதலீடுகளின் அடிப்படையில் அமைவதுடன், இது அமெரிக்க மற்றும் இலங்கை மக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலைத்திருக்கும் பங்காண்மையின் ஒரு கூறாகும்.

1961 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 35 ஆயிரம் கோடி இலங்கை ரூபாக்களுக்கும் (200 கோடி டொலர்) அதிகமான பெறுமதியுடைய நிகழ்ச்சிகள் மூலமாக யு.எஸ்.எய்ட் ஆனது ஆரோக்கியமான கல்வியறிவுள்ள மற்றும் தொழில் புரியும் மக்கள் கூட்டத்தை ஊக்குவிக்கிறது.

நேற்று வந்த சினோபோர்ம் தடுப்பூசிகளில் வடக்கு மாகாணம் முற்றாகப் புறக்கணிப்பு

கொழும்பு, ஜூலை 23

சீனாவின் மற்றுமொரு சினோபோர்ம் தடுப்பூசி தொகுதி நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இவ்வாறு கொண்டு வரப்பட்ட 20 லட்சம் தடுப்பூசிகளை 12 மாவட்டங்களுக்கு வழங்கவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு லட்சம் தடுப்பூசிகள், அம்பாறை மாவட்டத்துக்கு ஒரு லட்சம் தடுப்பூசிகள், நுவரெலியா மாவட்டத்துக்கு ஒரு லட்சம் தடுப்பூசிகள், புத்தளம் மாவட்டத்துக்கு ஒரு லட்சம் தடுப்பூசிகள், பதுளை மாவட்டத்துக்கு 2 ஒரு லட்சம் தடுப்பூசிகள், குருநாகல் மாவட்டத்துக்கு 4 லட்சம் தடுப்பூசிகள், காலி மாவட்டத்துக்கு 2 லட்சத்து 75 ஆயிரம் தடுப்பூசிகள், மாத்தறை மாவட்டத்துக்கு 2 லட்சம் தடுப்பூசிகள், இரத்தினபுரி மாவட்டத்துக்கு 2 லட்சம் தடுப்பூசிகள், பொலன்னறுவை மாவட்டத்துக்கு ஒரு லட்சம் தடுப்பூசிகள், மொனராகலை மாவட்டத் துக்கு ஒருலட்சம் தடுப்பூசிகள், அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு ஒருலட்சத்து 25 ஆயிரம் தடுப்பூசிகள் என்ற அடிப்படையில் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன.

இதுவரையில் 91 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் கிடைத்துள்ளன என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டுள்ளார்.

கோயில்மோட்டை விவசாயிகளின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு

மன்னார் - பாலம்பிட்டி கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கொழும்பிலிருந்து விரைந்த அதிகாரிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பாலம்பிட்டி கமநல சேவைகள் நிலையத்தில் இந்த விசாரணை இடம்பெற்றுள்ளது.

உரம் வழங்காமை, குளத்தின் துருசு சாவியை பறித்தமை, தண்ணீர் இல்லாமல் பயிர் கருகும் நிலையில் இருக்கின்ற போதும் கிணறு அல்லது குழாய்க் கிணறு அடித்ததை தடுத்தமை போன்ற காரணங்களை குறிப்பிட்டு கடந்த சில தினங்களுக்கு முன்பு மடு, கோயில்மோட்டை விவசாயிகளால் இலங்கை கமநல அபிவிருத்தி ஆணையாளர் அபிவிருத்தி பிரிவு அபேரத்னவுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது.

மேற்படி கடிதத்தையடுத்தே கமநல அபிவிருத்தி ஆணையாளர் அபிவிருத்தி பிரிவு அதிகாரிகளால் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த விசாரணையின் போது ஆளுநர் உத்தரவிட்டும் எங்களுக்கு பணத்துக்குக் கூட உரம் வழங்காமல், வேறு பகுதியிலுள்ளவர்களுக்கு விற்பனை செய்தனர், பயிரை கருக வைக்கும் நோக்கில் வேண்டுமென்றே துருசு சாவியை பறித்தார்கள், என கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் மற்றும் பாலம்பிட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மீதும், கோயில் மோட்டை விவசாயிகள் குற்றச்சாட்டை முன் வைத்தனர்.

அத்துடன் மூன்று வருடங்களாக நாங்கள் கேட்டுவரும் தனியான விவசாய அமைப்பை உருவாக்கித்தரவேண்டுமென்றும், அங்குள்ள கிணறொன்றை தூருவாரவும், புதிதாகக் கிணறுகளை அமைக்கவும் அனுமதியைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பான பதில்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கேட்டறிந்த கொழும்பிலிருந்து சென்ற கமநல அபிவிருத்தி ஆணையாளர் - அபிவிருத்தி பிரிவு அதிகாரிகள், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் மற்றும் பாலம்பிட்டி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மக்களுக்காக செயற்படுமாறும் மீறும் பட்சத்தில் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எச்சரித்ததுடன், விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும்படியும் பணிப்புரை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து பாலம்பிட்டி கமநல சேவைகள் நிலையத்தின் விவசாய ஆராய்ச்சி உதவியாளர், உங்களுக்கான உரத்தை வழங்குவதாக கோயில் மோட்டை விவசாயிகளுக்கு தொலைபேசியூடாக தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை விடுமுறை தினம் என்பதையும் பொருட்படுத்தாது விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு ஒரு நெல் பயிர்கூட கருகக்கூடாது என்ற எண்ணத்தில் விரைந்து செயற்பட்ட இலங்கை கமநல அபிவிருத்தி ஆணையாளர் - அபிவிருத்தி பிரிவு அபேரத்னவுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் கோயில் மோட்டை விவசாயிகள் நன்றியை தெரிவித்தனர்.

மேலும் இந்த விசாரணைகளின் போது பாலம்பிட்டி கமநல சேவைகள் நிலையத்துக்கு வந்து கோயில் மோட்டை விவசாயிகள் போன்று அதிகாரிகளைக் காப்பாற்ற முயன்ற பெரியபண்டிவிரிச்சான் - மேற்கு விவசாய அமைப்பின் தலைவர் சூசைப்பிள்ளை இக்னேஷியசை கமநல அபிவிருத்தி ஆணையாளர் - அபிவிருத்தி பிரிவு அதிகாரிகள் குறித்த அலுவலகத்தின் வளாகத்திலிருந்தே வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு 4 புதிய விமான சேவைகள்

சில சர்வதேச விமான நிறுவனங்கள் இலங்கையுடன் புதிய விமான சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பான பேச்சுகளை மேற்கொண்டுள்ளன.

தற்போது 32 சர்வதேச விமான நிறுவனங்கள் இலங்கையுடன் விமான சேவைகளில் ஈடுபட்டு வருகின்றமையுடன், மேலும் புதிய நான்கு விமான சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாக கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரான்ஸ் விமான நிறுவனம் மற்றும் மத்திய கிழக்கு விமான நிறுவனம் ஒன்றும் இலங்கையுடன் விரைவில் விமான சேவைகளை ஆரம்பிக்க இணங்கியுள்ளன. கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கி விமான சேவைகளை ஆரம்பிக்க இணங்கியுள்ளன.

இதேவேளை, ஓமானுக்குச் சொந்தமான சலாம் விமான நிறுவனம் மத்தள சர்வதேச விமான நிலையத்துடன் மீண்டும் விமான சேவைகளை ஆரம்பிக்க பேச்சு நடத்தியுள்ளது.

அத்துடன், சினமன் விமான நிறுவனம் இலங்கை முழுதும் உள்ள உள்நாட்டு விமான நிலையங்களை உள்ளடக்கிய விமான சேவைகளை ஆரம்பிக்க உடன்பட்டுள்ளது.

மேலும், புதிய வேலைத்திட்டத்தின் கீழ், இலங்கையை விமான சேவைத் துறையில் ஒரு கேந்திர நிலையமாக மேம்படுத்துவதுடன் விமான சேவையில் சாதகமான போட்டியை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் விமான நிலையங்களின் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் சுற்றுலாத் துறையை மேம்படுத்த சர்வதேச சுற்றுலா ஊக்குவிப்பு பிரசாரத்துக்கு ஏற்ப விமான நேரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகெங்கிலும் உள்ள நாடுகளுக்கு விமான சேவைகளை விரிவுபடுத்துவதால், எதிர்காலத்தில் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு ஆயிரத்துக்கும் அதிகமாக இருக்கும் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

தேசிய ரீதியான ஆசிரியர் போராட்டத்துக்கு வடக்கு மாகாணத்தவர்களுக்கும் அழைப்பு!

இலங்கை ஆசிரியர்சேவை சங்கத்தின் செயலாளர் புயல்நேசன் விடுப்பு

நாடு பூராகவும் அதிபர், ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்துக்கு இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தனது ஆதரவை வழங்குவதாகவும் அதேபோல் வட மாகாண அதிபர், ஆசிரியர்கள் குறித்த போராட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என இலங்கை ஆசிரியர்சேவை சங்கத்தின் செயலாளர் புயல்நேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் -

இந்த அரசானது தனது ஆட்சிக் காலத்தில் சில கோட்பாடுகளை முன்வைத்து இருந்தது. அதிலும் 2023 ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்தத்தை கொண்டு வந்தது அதே போல் மாணவர்களின் சீருடை மாற்றத்தைக் கொண்டு வந்தது கொரோனா காலத்திலே அவ்வாறு பல்வேறுபட்ட செயற்திட்டங்களை இந்த குறுகிய காலத்திலேயே இந்த அரசு முன்னெடுத்தது.

அரசின் சகல செயற்பாடுகளும் பல்வேறுபட்ட மாற்றங்களும் இந்த கொரோனா காலத்திலே முன்னெடுக்கப்பட்டன. அதேபோல ஆசிரியர்கள், அதிபர்கள் இந்தக் காலத்தில் போராட்டத்தில் ஈடுபடுவதை தவறு எனக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கொரோனா காலத்தில் ஆசிரியர்கள் அதிபர்கள் போராட்டத்தில் ஈடுபடுவது என்பது மாணவர்களின் கல்வியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

வடமாகாணத்தில் 13 வலயங்கள் செயல் நிலையில் உள்ளன சம்பள முரண்பாடு - அதாவது 30 வருடங்களாக காணப்படுகிற சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அனைத்து ஆசிரியர்களும் இந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு சகலரும் இந்தப் போராட்டத்திற்கு ஒத்துழைக்க வேண்டும். நமக்கு வெற்றி கிடைக்கும் வரை போராட்டத்தை நாங்கள் முன்னெடுப்பதன் மூலம் தமக்கு உரிய உரிமைகளை மீட்டெடுக்க முடியும்.

நாடு தழுவிய ரீதியாக முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு சகல ஆசிரியர்கள், அதிபர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். வடக்கு மாகாணத்துக்குட்பட்ட சகல வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள்,அதிபர்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இந்தப் போராட்டத்துக்கு நாங்கள் ஆதரவு வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் எமக்கு அதற்குரிய பலன் கிடைக்கும். அத்தோடு இந்தக் கொரோனா காலத்தில் அனைத்து மாணவர்களுக்கும் ஒன்லைன் கல்வி முறையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சில பாடசாலைகளில் ஒன்லைன் கல்வி செயற்படுத்தப்படவில்லை. இதனுடைய தாக்கம் எதிர்வரும் 2 அல்லது 3 ஆண்டுகளில் உணரப்படும். இலங்கையில் 14 தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள நிலையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள் இந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அவர்களின் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

பட்டம் விடச் சென்ற சிறுவன் பரிதாப சாவு

தம்புத்தேகம குருகம பிரதேசத்தில் பட்டம் விடச் சென்ற சிறுவன் ஒருவன் கிணறு ஒன்றில் விழுந்து உயிரிழந்துள்ளான்.

9 வயதுடைய சமீர பிரசாத் ரத்னாயக்க என்ற சிறுவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

நாள்தோறும் காலை வேளையில் பட்டம் விட வயல் வெளிக்குச் செல்வதை வழமையாக கொண்டிருந்த சமீர வழமை போல சென்றுள்ளார்.

பிள்ளை பல மணி நேரமாகியும் வீடு வராததால் குழப்பமடைந்த பெற்றோர் அவரை தேடிச் சென்றுள்ள நிலையில், பட்டத்தின் நூலைக் கண்டு உடனடியாக கிணற்றை சோதனை செய்தனர்.

பின்னர் கிணற்றில் இறங்கிப் பார்த்த போது, சிறுவன் சுமார் 20 அடி ஆழத்தில் சிக்குண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளான்.

அதனைத் தொடர்ந்து சமீரவை தம்புத்தேகம ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும், சிறுவன் ஏற்கனவே இறந்து விட்டான் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

நிதியமைச்சரின் முதலாவது சட்டமூலம் கறுப்பு பணத்தை வெள்ளையாக்குவது

ஜே.வி.பி. சாடல்

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ள முதலாவது சட்டமூலம் கறுப்பு பணத்தை வெள்ளையாக்கும் சட்டமூலமாகும் என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியல் சபை உறுப்பினருமான சுனில் ஹந்துனெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார். அரசாங்கம் தற்பொழுது சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அரசாங்கம் வரி ஏய்ப்பில் ஈடுபடுவோருக்கு நிவாரணங்களை வழங்கும் சட்ட மூலமொன்றையே கொண்டு வர உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தனக்கு நெருக்கமானவர்களுக்கு நலன்களை வழங்குவதற்காக இந்தச் சட்டத்தை கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் நண்பர்கள் மோசடியான வழிகளில் ஈட்டிய பணத்தை தூய்மையாக்குவதற்கு ஆதரவளிப்பது ஏற்புடைதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இந்த சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றின் உதவியை நாட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுளளார். கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பிரதம செயலருக்கு வவுனியாவில் வரவேற்பு

வவுனியா அரச அதிபராக கடமையாற்றி வட மாகாண பிரதம செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் சமன் பந்துலசேனவிற்கு வவுனியாவில் நேற்றுமுன்தினம்(புதன்கிழமை)வரவேற்பளிக்கப்பட்டது.

தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

முன்னதாக வவுனியா மாவட்டசெயலக வாயிலில் இருந்து மங்களவாத்தியம் முழங்க ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்ட பிரதம செயலாளருக்கு மாலை அணிவித்து கௌரவம் அளிக்கப்பட்டது.

நிகழ்வில் மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் நா.கமலதாசன், சமூக ஆர்வலர்கள், பொதுஅமைப்புக்கள், அரச உயர் அதிகாரிகள், மதகுருமார்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது கருத்து வெளியிட்ட பிரதம செயலர் -

அரச அதிபராகக் கடமையாற்றிய குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் எனக்கு பக்கபலமாக செயற்பட்ட அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள், பொதுஅமைப்புக்கள் மற்றும் ஊடகத்துறையினருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

வடக்கின் பிரதம செயலாளராக கடமை ஏற்கவுள்ள நிலையில் வடமாகாண மக்களுக்கு இன, மத, பேத மற்று எனது சேவையை பணிகளை முன்னெடுப்பேன். - எனத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சத்துக்கு மத்தியில் எசல பெரஹராவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

கொவிட் - 19 ஆபத்துகள் இருந்தபோதிலும், புராதன பழக்கவழக்கங்களை மதித்து, சுகாதாரத் துறையின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கண்டி எசல பெரஹராவை நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, பெரஹராவில் பங்கேற்கும் அனைத்து கலைஞர்களும் உயிர் பாதுகாப்பு குமிழியல் உட்படுத்தப்படுவார்கள் என்றும், பெரஹராவின் செயற்பாடுகள் தொடர்பான மேலதிக முடிவுகள் சுகாதார ஆலோசனையின் அடிப்படையில் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெரஹரா நிகழ்வுகளில் பங்கெடுக்கும் அனைத்து கலைஞர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் எசல பெரஹராவை நேரடியாகப் பார்வையிடுவதற்கு பொது மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுமா என்பது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

மத்திய மாகாண சுகாதாரத் துறையின் கூற்றுப்படி, நாட்டில் நிலவும் நிலைமையைக் கருத்தில் கொண்டு கண்டி எசல பெரஹராவை நேடியாக பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்பளிக்காமல் இருப்பது நல்லது என்றும் தியவதன நிலமே பிரதீப் நிலங்க தேல தெரிவித்துள்ளார்.

பெரஹராவில் காப்பு கட்டும் நிகழ்வு ஓகஸ்ட் 09, கும்பல் பெரஹரா ஊர்வலம் ஓகஸ்ட் 13, ரந்தோலி ஊர்வலம் ஓகஸ்ட் 22, இறுதியாக 'தியா கெப்பீம' எனப்படும் நிகழ்வுடன் பெரஹரா நிகழ்வுகள் ஓகஸ்ட் 23 ஆம் திகதி முடிவடையும்.

ரிஷாத் வீட்டில் பணிபுரிந்த சிறுமி தொடர்பில் தாயிடம் 10 மணித்தியாலங்கள் வாக்கு மூலம்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த சிறுமியின் மரணம் தொடர்பாக அவரது பெற்றோர் உள்ளிட்ட 6 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட இரண்டு விசேட விசாரணைக் குழுக்கள் கடந்த புதன்கிழமை டயகம பகுதிக்குச் சென்று விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்தன என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி, சிறுமியின் தாயிடம் இரண்டாம் நாளாகவும் புதன்கிழமை சுமார் 10 மணித்தியாலங்கள் வாக்கு மூலம் பதிவு செய்துள்ளனர்.

அதேநேரம் குறித்த சிறுமியை ரிஷாத் பதியூதீனின் வீட்டுக்கு அழைத்துச் சென்ற தரகரிடமும் நேற்று வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ரிஷாத் பதியுதீனின் இல்லத்துக்கு கடந்த 2020 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் டயகம 3 ஆம் பிரிவில் இருந்து 15 வயது சிறுமி வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார். கடந்த 03 ஆம் திகதி தீக்காயங்களுடன் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 15 ஆம் திகதி சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த சிறுமி நீண்டகாலமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தமை தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படவே மாட்டேன்!

அமைச்சர் டக்ளஸ் சத்தியம்

(இ.கலையமுதன்)

நாட்டை விற்கும் வகையிலோ அல்லது அண்டை நாடான இந்தியாவுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையிலோ நான் ஒருபோதும் செயற்பட மாட்டேன்.

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற பல்வேறு கலந்துரையாடல்களில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, சீன நிறுவனத்துக்குப் பூநகரி - கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைக்கு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

சீன நிறுவனத்தின் முதலீடுகளையும் தொழில்நுட்பத்தையும் பெற்று எமது மக்களுக்குப் பயன்படக் கூடிய வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது

மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவோ அல்லது நாட்டை விற்கவோ அல்லது அண்டை நாடான இந்தியாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தவோ நான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

சீனாவின் தொழில் நுட்ப அறிவையும் பெற்று போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதே நோக்கமாகும் - என்றார்.

வேலிக் கட்டைக்கு ஓணான் சாட்சியா?

ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை கண்டனத்துக்குரியது என்கின்றது ரெலோ

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கத் தேவையில்லை சில சரத்துக்களை மாத்திரம் மாற்றம் செய்வதன் மூலம் சட்டத்தை திருத்தி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தலாம் என்கின்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை நாம் நிராகரிக்கின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சட்டவல்லுநர்கள், ஜனநாயக வாதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகள் ஏன் சர்வதேச நாடுகள் உட்பட பல தரப்புக்கள் இந்தச் சட்டத்தால் ஏற்பட்டகடும் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து இதை நீக்குமாறு வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள்.

ஏற்கனவே வீழ்ந்து செல்லும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம் என புதிய நிதி அமைச்சர் நாட்டுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இந்தச் சட்டத்தை நீக்காது விட்டால் ஐரோப்பிய ஒன்றிய வரிச் சலுகை நீக்கப்பட மாட்டாது. எமது ஏற்றுமதியும் அந்நிய செலாவணியும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும். அப்படியான அபாய நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லும் பரிந்துரையை ஜனாதிபதி ஆணைக்குழு வழங்குவது எதற்காக?

ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கத் தேவையில்லை என்று ஜனாதிபதிக்கு பரிந்துரை வழங்குவது வேலிக் கட்டைக்கு ஓணான் சாட்சியாக அமைவது போல் இருக்கின்றது. இது எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான்.

இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தால் எமது தமிழினம் சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கின்றது. இன்றும் பல தசாப்தங்களாக விசாரணையோ, வழக்குகளோ, பிணையோ இன்றி பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பலம்மிக்க இளைய சமுதாயம் இந்த நாட்டை விட்டுக் குடி பெயர்வதற்கும் இனக் குடிப்பரம்பலில் சிதைவை ஏற்படுத்துவதற்கும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.

சட்டவிரோதமான கைதுகள், கால வரையறை அற்ற தடுப்பு, பிணை வழங்காமை, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத சூழ்நிலை என்று அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவே அமைந்திருக்கின்றது. நியாயமான எமது போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்து எமது இளம் சமுதாயத்தை வகை தொகையின்றி கைது செய்ததோடு சித்திரவதைக்கும் உள்ளாக்குவதற்கே இந்த சட்டம் பயன்படுத்தப்பட்டது. மாறாக எம்முடைய போராட்டத்தை தடுக்கவோ நிறுத்தவோ முடியவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

இன்று தமது தோல்விகளை மறைப்பதற்கும் தமக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்தை நடத்த முற்படுபவர்களை கைது செய்வதற்கும் அரசியல் பழிவாங்கல்களை அரங்கேற்றுவ தற்குமே இந்தச் சட்டம் பயன்பட்டு வருவதை அனைவரும் அறிவார்கள்.

ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படாத போற்றப்படாத இந்த அரசில், இந்தச் சட்டத்தில் சிறிய மாற்றங்களின் மூலம் ஜனநாயகத்தை பேணிவிடலாம் என்று ஜனாதிபதி ஆணைக்குழு சொல்வது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது.

அப்பாவி மக்களைப் படுகொலை செய்து நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படுகின்றார்கள். அதே வேளை தம்முடைய இனத்திற்காகவும் மக்களுக்காகவும் நியாயமாக

குரல் கொடுப்பவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதற்கு வழிவகுக்கும் அரசுக்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு பரிந்துரைக்கும் மாற்றங்கள் எந்த விதத்தில் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுத்தரும் ?

இதே அரசில் பதவி வகித்த காலங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் கடந்த காலங்களில் அதே சட்டத்தின் கீழ் ஆதாரங்கள் இன்றி கைதுசெய்யப்பட்டு வழக்கு விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டதை அல்லது தடுத்து வைக்கப்பட்டு வருவதை இந்த நாடு நன்கு அறியும்.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் முழு நாட்டிலும் அராஜகத்தைத்தையும் சர்வாதிகாரத்தையும் நிலை நிறுத்த பயன்படும் இந்தச் சட்டத்தில், எந்த மாற்றங்களும் இதன் அடிப்படை நோக்கத்தை சீர்செய்து விடப் போவதில்லை. ஆகவே, முற்றாக இந்தச் சட்டமூலம் நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு.

அனைத்துத் தரப்பினரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிப்பதற்கு ஒருமித்து செயலாற்ற கோருகின்றோம். அதிகாரங்களுக்கும் அற்ப சலுகைகளுக்காகவும் இந்த சட்டத்திற்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்குபவர்கள் அறிந்தோ அறியாமலோ உங்களுக்கும் உங்கள் எதிர்கால சந்ததிக்கும் சிதை மூட்டுகிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது.

யாழ்ப்பாணம் நகரில் வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம் நகரில் வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்.மத்திய பஸ்நிலையத்துக்கு முன்னால் உள்ள நடைபாதை கடைத்தொகுதி ஒழுங்கையிலேயே வயோதிபரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் அடையாளம் காண்பதற்காகவும் பரிசோதனைகளுக்காகவும் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நினைவுகளில் வாழும் .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

73 ஆம் ஆண்டு ஆரம்பித்த எங்கள் நட்பு அவர் மறைந்த 2015 ஆம் ஆண்டு வரை நாற்பத்தியிரண்டு வருடங்கள் தொடர்ந்திருக்கிறன. இடையே சில காலங்கள் தொடர்புகள் அற்று இருந்தோம். போர்க்காலங்களில் நாங்கள் இடப்பெயர்வினால் வீடு வாசல் விட்டு அலைந்து கொண்டிருந்த காலங்களில் கடிதங்கள் கூட போட முடியாத சூழல். அப்போதும் கூட அவர் லண்டனில் இருக்கும் எனது தம்பி தங்கைகளிடம் எங்களைப்பற்றி விசாரித்துக் கொண்டேயிருப்பார். பின்னர் 2011 ஆம் ஆண்டு நான் ஆஸ்திரேலியா வந்தபோது நீண்ட நாள்களின் பின் அவருடன் தொலைபேசியில் கதைக்க முடிந்தது.

அதன் பின் ஒவ்வொரு தடவை இங்கு வரும் போதும் கதைத்துக் கொள்வோம். அவருடைய மறைவுக்கு சில வாரம் முதல் கூட அவருடன் தொடர்பு கொண்டேன். அவரின் கணவர் அருண்தான் எடுத்தார். கொஞ்சம் களைப்பாக இருக்கிறது என்று படுத்திருக்கின்றார் என்றார். நான் அவரை தொந்தரவு செய்ய வேண்டாம் சுகம் விசாரிக்கத்தான் எடுத்தேன் என்று சொல்லி அவரின் உடல் நிலை பற்றி கதைத்துவிட்டு வைத்துவிட்டேன். அரை மணி நேரத்தில் அருண் திரும்ப எடுத்து அவ உங்களுடன் கதைக்கப் போகிறாவாம் என்றார். அடுத்த வினாடி விஜயாவின் குரல். மெலிந்த குரலில் அன்பும் வாஞ்சையும் கலந்திருந்தது. நோயின் வலிகளை தாண்டி நின்ற திடம் தெரிந்தது.

அன்றுதான் அவரின் குரலை நான் கடைசியாக கேட்டது. அதன்பின் அவரின் மறைவுச் செய்தியைத்தான் கேட்டேன். முருகபூபதி அவர்கள்தான் தகவல் தந்தார். உண்மையில் அதிர்ந்து போய்விட்டேன். மனம் தாங்கவில்லை. பல தடவை ஆஸ்திரேலியா வந்து போயிருந்தாலும் ஒருதடவையேனும் மெல்போர்ண் போகவோ அவரைச் சந்திக்கவோ முடிந்ததில்லை. அது பெரும் சுமையாக மனதை அழுத்துகிறது. எண்பதுகளில் பார்த்த முகமே மனதில் நிலைத்து விட்டது. இனிய தோழியை இழந்து விட்ட துயரம் என்றென்றும் ஆறப்போவதில்லை.

அவர் எப்போதும் எல்லோராலும் நினைவு கொள்ளக் கூடியவர். நினைவு கொள்ள வேண்டியவர். அவ்வளவு தூரம் தன் வாழ்வை இந்த சமூகத்திற்கும் இலக்கியத்துக்கும் அர்ப்பணித்து வாழ்ந்தவர். எல்லோராலும் நேசிக்கப்படும் மகத்தான ஒரு பெண்மணி. அவர் என் தோழி என்பதில் எனக்கு பெருமையுண்டு.

அவரின் நினைவுகள் என்றென்றும் என் நெஞ்சில் நிறைந்தே இருக்கும்.

தமிழ் ஊடகத்துறையின் .....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

"புறப்படுவோமா?"- என்று கேட்டார். நான் தலையசைத்து விட்டு எழுந்து அவருடன் நடையைக் கட்டினேன். என் அலுவலகம் வரை என்னுடன் உரையாடியபடி நடந்து வந்த அவர், அதைத் தாண்டி புறக்கோட்டை பக்கம் பஸ்ஸுக்காகப் போனார். நான் அலுவலகத்துக்குள் விரைந்தேன். காபன் தாளைத் தூக்கிப் பிடித்து வெளிச்சத்தில் வாசித்தேன். அது சர்வானந்தாவின் தீர்ப்பு அடித்த காபன் தாள். தீர்ப்புக் கடைசிப் பக்கம். மற்ற நான்கு நீதியரசர்களும் இரண்டு, இரண்டாகப் பிரிந்து தீர்ப்பளித்து இருப்பதால் தமது முடிவே இறுதித் தீர்ப்பாக வருகின்றது என்ற சாரப்பட தம் முடிவை குறிப்பிட்டிருந்தார் ஆலயத்தின் தலைவர் நீதியரசர் சர்வானந்தா. தமது தீர்ப்புக்கான விளக்கங்கள் பின்னர் தரப்படும் என அவர் குறிப்பிட்டு இருந்தார் என்வும் நினைவு.

அதை வெளிச்சத்தில் தூக்கிப்பிடித்து பார்த்த துணையாசிரியர் இரத்தின சிங்கத்துக்குத் திருப்தியோ திருப்தி. ஆசிரியர் சிவநாயகம் தந்த உறுதியான ஆதரவில் தலைப்பிட்டு தாமே செய்தியையும் எனது பெயரில் எழுதினார் துணையாசிரியர்.

"தான் விரும்பிய நேரத்தில் தேர்தலை ஜனாதிபதி அறிவிக்கலாம்; மூன்று - இரண்டாகப் பிரிந்து நீதிமன்றம் தீர்ப்பு; இன்று சபையில் அதனை சபாநாயகர் அறிவிப்பார்" - என்ற பாணியில் தலைப்பிடப்பட்டிருந்தது.

அப்படி என் பெயருடன் நீதிமன்றத் தீர்ப்புச் செய்தி முதல் பக்கத்தில் தலைப்பாக வருவது என் சீனியர் ரிப்போர்ட்டர் பலருக்கும் எரிச்சலைத் தந்திருக்கும் போல. அதன் விளைவை அடுத்த நாள் காலையில் நான் சந்திக்க வேண்டியதாயிற்று. உண்மையில் நான் நடுநடுங்கித்தான் போனேன். ஆனால் ஆசிரியர் சிவநாயகம் காவலரண் போல உறுதியாக நின்றார்.

அன்றுதான் ஒரு பத்திரிகை ஆசிரியர் எவ்வளவு உறுதியாக, எவ்வளவு துணிச்சலுடன், அதே நேரம் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதை நேரில் பார்த்தேன்.

நான் என்றோ ஒரு நாள் பத்திரிகை ஆசிரியர் கதிரையில் அமர்ந்தால் எப்படி இருக்க வேண்டும் என்ற மன வைராக்கியம் அன்றுதான் என் மனதில் பதிந்தது. அதை இன்று வரைப் பின்பற்றி வருகிறேன்.

அன்று அப்படி என்ன நடந்தது? நாளை பார்ப்போமா!

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

பிரபல கஞ்சா, கசிப்பு வியாபாரி மட்டக்களப்பில் வைத்துக் கைது

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை கடந்த புதன்கிழமை மாலை முற்றுகையிட்ட பொலிஸார் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பிரபல கஞ்சா, கசிப்பு வியாபாரியைக் கைது செய்துள்ளமையுடன் 70 லீற்றர் கோடாவை மீட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அவசர சேவை 119 இலக்கத்துக்குப் பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து குறித்த பிரதேசத்திலுள்ள கசிப்பு உற்பத்தி நிலையத்தை சம்பவ தினமான கடந்த புதன் மாலை போதை ஒழிப்பு பிரிவு பொலிஸ் சார்ஜன் ரி. கிருபாகரன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் முற்றுகையிட்ட போது அங்கு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 42 வயதுடைய பிரபல கஞ்சா மற்றும் கசிப்பு வியாபாரியை கைது செய்தமையுடன் 70 லீற்றர் கோடாவையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வேலைவாய்ப்பு

சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு - 076 740 3814

ஆசிரியர்கள் போராட்டம் காரணமாக கொழும்பில் கடும் வாகன நெரிசல்

கொழும்பு - கோட்டைப் பகுதியின் பல்வேறு வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் - ஆசிரியர் சங்கங்கள் சில நேற்று (வியாழக்கிழமை) கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை ஆரம்பித்திருந்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகம் வரையில் ஊர்வலமாக சென்றமையால் இவ்வாறு போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

20 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் வந்தன

கொழும்பு, ஜூலை 23

கொரோனா வைரஸுக்கு எதிரான மேலும் இருபது லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான இரண்டு விமானங்கள் ஊடாக குறித்த தடுப்பூசிகள் நேற்று (வியாழக்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டன என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரையில் இலங்கைக்கு 91 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிகையலங்கரிப்பு நிலையத்தை சேர்ந்தவர்கள் உள்ளிட்ட 10 பேருக்கு வவுனியாவில் கொவிட்

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் உள்ள சிகையலங்கார நிலையத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 10 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரின் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

அதில், காத்தார் சின்னக்குளம் பகுதியில் நான்கு பேருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த மூன்று பேருக்கும், கோமரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும், கணேசபுரம் பகுதியில் ஒருவருக்கும், சுந்தரபுரம் பகுதியில் ஒருவருக்கும் என 10 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2021 இல் வெளியிடப்பெற்றது.

UTV HD TAMIL
sky Yoga
இணைந்து வழங்கும்
மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எது தேவை ?
தென்னிந்திய நகைச்சுவை பட்டிமன்ற பேச்சாளர்
மோகனசுந்தரம்
அவர்களின் நகைச்சுவை சிந்தனை உரை.
JULY 23 ஆம் திகதி பௌர்ணமி தினத்தில்
இரவு 07.00 மணிக்கு ZOOM ஊடாக இடம்பெறும்.
zoom
ZOOM ID – 362 170 36 66 | PASSWORD – SKY
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்.
SKY YOGA TV SRI LANKA YOUTUBE - மற்றும்
UTV FACEBOOK - தளங்களின் ஊடாக நேரடி ஒளிபரப்பு இடம்பெறும்.
தொடர்புகளுக்கு - 0777824004
Main Sponsor
Blue Ocean GROUP OF COMPANIES
Co-Sponsor
OMS
Oceanic Knitters (Pvt) Ltd ISO 14001:2015
BALKAN
Media Sponsor
UTV HD TAMIL
tamil one
Digital Media
EVENT BY – A ONE MEDIA SOLUTIONS